# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 5<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ<br>ஆகஸ்ட்—செப்டெம்பர் '57 | வருட<br>சந்தா<br>ரு. 2-4-0 |



-Page-209-

ACC. No. 18582




சுந்தரரால் குணமடைய விரும்பாத கலிக்காமர்,
குத்திக்கொண்டு உயிர் துறக்கிறார்.

பெரியபுராணச் சித்திர விளக்கம் 41 பக்கம் 196

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. அகஸ்தியர் முருகன் 3 | (திருப்புகழ் மணி) | ... | 193 |
| 2, ஏயர்கோன் கலிக்காம நாயனுர் | (கி.வா.ஜ.) | ... | 196 |
| 3. அருணைத் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) | ... | 198 |
| 4. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) | ... | 205 |
| 5. திருவண்ணுமலையில் அருளுரிமை | (இளவழகனுர்) | ... | 209 |
| 6. பொருள்சேர் புகழ் | (அ. கி. ரங்கராஜன்) | ... | 212 |
| 7. துயிலிற் பயிலல் | | ... | 217 |
| 8. கந்தரநுபூதி விளக்கம் 3ஆம் பாட்டு | (கி.வா.ஜ.) | ... | 221 |
| 9. ஜல்லிகை | (ரஸபதி) | ... | 224 |
| 10. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி | திருப்புகழ் சதுரர் சே.த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) | ... | 236 |
| 11. The Assembly of good men | *(Thiruppugal Mani)* | ... | 239 |


---

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செல்வு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

---

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ.1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர். சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 9 | ஹேவிளம்பி ௵ ஆவணி ௴<br>ஆகஸ்டு - செப்டம்பர்—57 | இதழ் 5 |
|---|---|---|


## அகஸ்தியர் முருகன்-3

(திருப்புகழ் மணி)

முருகன் காணப்படும் இடங்களை அகஸ்தியர் வெகு அழகாக சித்தரிக்கின்றார். முதல் முதலாகத் தொண்டர்கள் திரண்டெழும் கூட்டத்திலேயும், அவர்கள் சுற்றிச் சுழன்றிடும் ஆட்டத்திலேயும் முருகனைக் கண்டு போற்றிடலாம் என்றார். கந்தரலங்காரத்தில் அருணகிரியார் கூறுவதும் நினைவுக்கு வரும்.

*"சூரில் கிரியில் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாம்*
*சாரில் கதியன்றி வேறிலைகாண் தண்டு தாவடிபோய்*
*தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வமெல்லாம்*
*நீரில் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே"*

நல்ல கதிபெறுவதற்குத் தொண்டர்களின் சத் சங்கமேதான் வழி. அருணகிரியார்க்கு முடிவாக குருநாதன் செய்த அருள் தொண்டரில் தன்னைக் கூட்டியதுதான் என்றார். "அன்பால் கெடுதலிலாத் தொண்டரில்" கூட்டி விட்டானும் முருகன். பிறவி யிறந்ததாம்.

---

உற்றார்பெற் றாரால் உறுதியில்லை என்றுணரக்
கற்றார்க் கருள்செய் கருணைக் கடைக்கலமே

உடலெனும் சிறை விடுதலைப் பட்டதாம். பாசவினை விலங்குக ளெல்லாம் விட்டதாம். மோக்ஷம் (அல்லது) வீடு கிட்டியதாம்.

தாயுமானவரும் அரும்பொன்னே! மணியே யென்று குருநாதனைக் கூவி வேண்டுகின்றார்.

"ஏதுமறியாத வெறும் துரும்பனே னெனினும்
தொண்டரோடு கூட்டு கண்டாய்"

ஆதிசங்கரரும், உபதேசிக்கின்றார்.

"சத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி:"

ஜீவன் முக்தி நிலைபெறுவதற்குச் சங்கத்தை நாட வேண்டுமாம்.

திருப்புகழில் வேண்டுவதும்,

"ஞான நெஞ்சினர் பாலிணங்கிடு கூர்மைதந்தினி
ஆளவந்தருள் புரிவாயே"

என்றார். இப்படி எல்லா மகான்களும் சத்சங்கத்தையே நாடுவதின் காரணம் என்ன? அகஸ்தியர் கூறுவார்.

"தொண்டர் திரண்டெழும் கூட்டத்திலே—அவர்
சுற்றிச் சுழன்றிடும் ஆட்டத்திலே
அண்டர் தினம்தொழும் வானத்திலே—தவர்
ஆன்மசுகம் பெறும் மோனத்திலே"

"வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத் தகத்தான் முருகனுகையால், தொண்டர் கூட்டம் அவன் உறைவிடங்களில் மிகவும் சிறந்ததாகும். மீண்டும் கூறுவார் முருகன் இருப்பிடத்தை.

---

பார்த்தேயிவ் வாழ்க்கை பயனில்லையென் றோர்ந்தேனை
ஈர்த்தேநின் தாளில் இருத்துவதும் என்றேயோ

"வேதாந்த தத்துவ ஸாரத்திலே—அலை
வீசும் செந்தூர்க்கடல் தீரத்திலே
ஆதாரகுண்டலி யோகத்திலே—பர
மாத்த ஜீவாத்ம வைபோகத்திலே"

எங்கு ஆசை அலைகளெல்லாம் அடங்குகின்றனவோ, அங்கும், செந்தூர்க் கடல்போல் ஆழ்ந்த கருத்துக்கள் பொருந்திய அளவிலா வேதவேதாந்த நூல்களின் ஸாரத்திலேயும் முருகன் காணப்படுவான். "பரமாத்ம ஜீவாத்ம ஐக்கியம் ஏற்படுகின்ற பெரியோர்களின் உள்ளத்திலும் காணப்படுவான். யோகிகள் பயின்றுவரும் யோகத்திலும் காணப்படுவான். உலகெல்லாம் ஒன்றெனவும், அவைகளில் உறைபவன் ஒன்றெனவும், ஆத்மா ஒன்றெனவும், எல்லாம் பரமாத்ம சுவரூபம் என்றும் உணர்ந்த பெரியோர் உணர்ச்சியிலே முருகன் காணப்படுவான் என்றார். இந்தப் பாட்டு சின்ன பாட்டு அடங்கிய விஷயம் உபநிஷத்சாரம் முருகன் உலகெலாம் பரந்த உபநிஷத்தின் பிரம்மம் என்றிருந்தும், அவன் சுவரூப முகமாகவும் நமது உணர்ச்சியில் காட்சி தென்படும் முகமாகவும் நிற்கின்ற அவனருளைப் போற்றுகின்றார்.

"நண்ணும் இயற்கை அமைப்பினிலே—ஒளிர்
நக்ஷத்திரங்கள் இமைப்பினிலே
விண்ணில் விந்துள நீலத்திலே—மயில்
மேல்வரும் ஆனந்த கோலத்திலே
ஷண்முக நாயகன் தோன்றிடுவான்—சிவ
சத்குரு நாயகன் தோன்றிடுவான்.

---

(தொடரும்)

---

செய்ய துரையேநின் தாள்போற்றும் சேயென்னை
உய்ய விரைந்தே உளந்தெளித்தல் என்றேயோ

# ஏயர்கோன் கலிக்காம நாயனார்

(கி. வ. ஜ.)

காவிரியின் வடகரையில் பெருமங்கலம் என்று வளம் மிக்க ஊர் ஒன்று உண்டு. அங்கே வேளாண்மை செய்யும் ஏயர் குலம் என்ற ஒரு குலத்தினர் பலர் வாழ்ந்திருந்தனர். அக்குலத்தினர் சோழ அரசர்களின் சேனாபதிகளாக இருக்கும் பெருமை உடையவர்கள்.

அந்தக் குலத்தில் கலிக்காமர் என்பவர் சிறந்த சிவ பக்தராகத் திகழ்ந்தார். திருப்புன்கூர்ச் சிவாலயத்துக்கு மிகுதியான திருப்பணிகளைச் செய்தவர் அவர். சிவனடியார்களிடம் பெருமதிப்பு வைத்து அவர்களைப் போற்றி வழிபட்டு வந்தார்.

அக்காலத்தில் திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனாருக்காக இறைவன் பரவை நாய்ச்சியாரிடம் தூது சென்ற அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது. அதைக் கேட்ட கலிக்காமர், "நெஞ்சிலே சிறிதும் அச்சம் இல்லாமல் ஒரு பெண்ணினிடம் எம்பிரானைத் தூது விடுவதாவது! இதைக் கேட்டும் உயிர் வாழும் அபாக்கியம் எனக்கு இருக்கிறதே!" என்று வருந்தினார். "இந்தச் செயலைச் செய்தவனுடைய மனம் எவ்வளவு கடினமாக இருக்க வேண்டும்! அவனை நான் காண்பேனாகில் என்ன ஆகுமோ, அறியேன்' என்று பொருமினார். அவருடைய சினத்தை ஊரிலுள்ளார் உணர்ந்து கொண்டனர்.

இது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் எட்டியது. நான் செய்தது பிழைதான். ஆனாலும் அவர் என்மேல் கொண்ட சினத்தை மாற்றுவது எப்படி? இறைவனே, நீதான் திருவருள் செய்ய வேண்டும்" என்று அவர் ஒவ்வொரு நாளும் இறைவனை வேண்டிக் கொண்டு வந்தார்.

இந்த இரண்டு தொண்டர்களுக்கும் இடையே உள்ள பிணக்கைத் தீர்க்க வேண்டும் என்று திருவுள்ளங்

---

**காமம் முதலாம் கடல்கடந்து காக்குமதிச்**
**சேமக் கரைதன்னைச் சேர்வதுவும் என்றேயோ**

கொண்ட இறைவன் கலிக்காமருக்குச் சூலை நோய் வரச் செய்தான். பின்பு அவர் கனவிற் சென்று, "இந்தச் சூலை வன்றொண்டன் வந்து தீர்த்தால் அன்றிப் போகாது" என்று அருளிச் செய்தான். கலிக்காமர், "இந்தச் சூலை நோயால் வரும் துன்பத்தைப் பொறுத்தாலும் பொறுப் பேனேயன்றி, பெரிய பிழையைச் செய்த வன்றொண்டனால் உண்டாகும் பரிகாரத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன்' என்ற உறுதியோடிருந்தார்.

இறைவன் சுந்தரரிடம், "நம்முடைய ஏவலால் கலிக்காமனுக்குச் சூலை நோய் உண்டாகியிருக்கிறது. அதை நீ போய்த் தீர்ப்பாயாக" என்று உணர்த்தினான். அதனை உணர்ந்த சுந்தரர், இறைவன் திருவருளை நினைந்து மகிழ்ந்து வணங்கினார். எம்பெருமான் ஏவலின்படியே சுந்தரர் புறப்பட்டு விரைந்து சென்றார். தமது வருகையை கலிக்காமருக்குச் சொல்லிவிட்டார்.

அது கேட்ட கலிக்காமர். "ஐயோ! இந்தத் துன்பத் துக்கு என் செய்வேன்! அவன் இங்கே வந்து என் நோயைத் தீர்ப்பதற்கு முன் நான் இறந்து போவது நல்லது. இந்தச் சூலையையும் இது பற்றியிருக்கும் வயிற்றையும் கிழிப்பேன்" என்று தம் உடைவாளை யெடுத்துக் கிழித்துக்கொண்டார். சூலையோடு உயிரும் போயிற்று. அது கண்டு அவர் தேவி யார் தாமும் அவரோடு உயிரை நீக்கத் துணிந்த சமயத்தில், "சுந்தரமூர்த்தி சுவாமி வருகிறார்" என்று சிலர் வந்து தெரிவித்தார்கள். அது கேட்டவுடன் அப்பிராட்டியார், "இங்கே நிகழ்ந்தது யாவும் அவருக்குத் தெரிய வேண்டாம். யாரும் அழாதீர்கள். அவரை நன்கு வரவேற்று உபசரி யுங்கள்" என்று உடனிருப்போரை ஏவினார். அப்படியே அவர்கள் செய்ய நம்பியாரூரர் உள்ளே போந்து ஓர் ஆசனத் தில் எழுந்தருளி யிருந்தார். "ஏயர்கோனுக்கு வந்த சூலை யைத் தீர்த்து அவருடன் சில காலம் இருக்கலாம் என்று வந்திருக்கிறேன். அவரைக் காண வேண்டும்" என்று கூறி னார். வீட்டில் இருந்த ஏவலாளர்கள் கலிக்காமர் மனைவியா ருடைய சொற்படி, "அவருக்கு ஒரு துன்பமும் இல்லை;

---

உன்னை உணரா உலகர் உறவகல
என்னை வழிகாட்டி ஏற்பதுவும் என்றேயோ

உள்ளே படுத்துக்கொண்டிருக்கிறார்'' என்று கூறினார்கள். சுந்தரர், "ஒரு தீங்கும் இல்லையென்றாலும் என் மனம் தெளிவு பெறவில்லை; ஆகையால் அவரைக் காண வேண்டும்'' என்றார். அவர் வற்புறுத்தியதனால் அவரை அழைத்துச் சென்று கலிக்காமர் உடலைக் காட்டினார்கள்.

இரத்தம் சொரிந்து குடல் வெளியே தள்ளி இறந்து கிடந்த ஏயர்கோனைப் பார்த்தவுடன், "ஐயோ! இப்படி ஆகிவிட்டதே!" என வருந்தி, "நானும் இவர் முன்னே உயிரை நீத்துச் செல்வேன்'' என்று கூறி அந்த உடை வாளைப் பற்றினார். அப்போது இறைவன் திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து, "நான் நண்பனாகி விட்டேன்'' என்று விரைந்து சுந்தரர் கையிலிருந்த வாளைப் பற்றிக் கொள்ள, அப்பெருமான் ஏயர்கோனை வணங்கி அடி வீழ்ந்தார். உடனே வாளை எறிந்துவிட்டுக் கலிக்காமரும் சுந்தரர் காலில் விழுந்து பணிந்தார். இந்த அதிசயம் கண்டு வானவர் மலர் மாரி பொழிந்தனர்.

இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். இருவரும் வேறுபாடு நீங்கி உளங் கலந்த அன்புடையவராகித் திருப்புன்கூர் சென்று இறைவனை வணங்கினார்கள்.

---

சிவமாதுடன் எனும்

## அருணைத் திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

*சிவமா துடனே அநுபோ கமதாய்,*
*சிவஞா னமுதே பசியாறித்,*
*திகழ்வோ டிருவோர் ஒருரூ பமதாய்,*
*திசைலோ கமெலாம் அநுபோகி*

*இவனே யென,மால் அயனோ டமரோர்*
*இளையோன் எனவே, மறையோத,*
*இறையோன் இடமாய் விளையா டுகவே,*
*இயல்வே லுடன்மா அருள்வாயே;*

---

தந்தைதாய் ஆகித் தனிக்குருவும் மெய்க்கலையும்
எந்தைநீ யாகும் இதையுணர்தல் என்றேயோ

தவலோ கமெலாம் முறையோ எனவே
தழல்வேல் கொடுபோய் அசுராரைத்
தலைதூள் படஏழ் கடல்தூள் படமா
தவம்வாழ் வுறவே விடுவோனே!
கவர்பூ வடிவாள் குறமா துடன்மால்
கடனும் எனவே அணைமார்பா!
கடையேன் மிடிதூள் படநோய் விடவே
கனல்மால் வரைசேர் பெருமாளே!

(தவலோகம்......விடுவோனே.)

(பதவுரை): தவலோகம் எலாம் முறையோ எனவே-அருந் தவம் செய்யும் முனிவர் அனைவரும், (இது) முறையோ என்று அபய குரல் கொடுக்கவே;

தழல்வேல் கொடு போய்-தழல்கின்ற வேல் கொண்டு சென்று;

அசுராரை தலை தூள் பட-அசுரர்கள் தலை பொடிபடவும்; ஏழ் கடல் தூள் பட-ஏழு கடலும வற்றிப் போகவும்; மா தவம் வாழ் வுறவே விடுவோனே-மேலோர் தவநிலை வாழவும் ஏவியவனே;

(கவர்பூ......அணைமார்பா.)

கவர் பூ வடிவாள் குற மாதுடன்-(மனம்) கவரும் காயாம் பூ நிறம் உடைய (அன்புள்ளம் கொண்ட) குறவர் குல வள்ளி யாரை;

மால் கடனும் எனவே அணை மார்பா-அன்புக் கடன்மையாம் என்னும் திருவுளம் கொண்டே, (அத்து விதமாகத்) தழுவும் திரு மார்பை உடையவனே;

(கடையேன்......பெருமாளே.)

கடையேன் மிடி தூள் படவே-கீழ்மையேன் ஆன எனது (அறியாமையாம்) வறுமை அழியவும்;

நோய் விடவே-(தீராப்) பிறவி நோய் நீக்கவும்;

கனல் மால் வரை சேர் பெருமாளே-பெரிய அழல் உருவ மான திரு அண்ணாமலையில் தங்கி யிருக்கும் பெருமையிற் சிறந்த பெரியோனே;

(சிவ மாதுடனே......அருள்வாயே.)

சிவ மாதுடனே அநுபோகமது ஆய்-சிவமாகிய தலைவியுடன் சேர்ந்த இன்ப அனுபவமாய்;

---

பராமுகமா நீயிருந்தால் பந்தமது பற்றும்மே
குராவடியாய்! வந்தெனை நீ கூடுவதும் என்றேயோ

சிவ ஞான அமுதே பசி ஆறி-(அரிய) சிவஞான அமுதால், (ஆன்மப்) பசி அடங்கி;

திகழ்வோடு இருவோர் ஒரு ரூபமதாய்-பிரகாசத்துடன் (சிவமாதும் நானுமான) இருவரும் ஒரே உருவம் ஆகி;

திசை லோகம் எல்லாம் அநுபோகி இவனே என-எண் திசையும் எவ்வுலகும் இவனே அநுபவ ஞானி என்று அறிவிக்க;

மால் அயனோடு அமரோர் இளையோன் எனவே-திருமாலும், பிரமனுடன் தேவர்களும், (இவன்) முருகன் என்று இயம்ப;

மறை ஓத-(இவைகளை ஒட்டி) வேதங்களும் விநயமாக விளம்பரிக்க(ச் சாருபம் எய்தி);

இறையோன் இடமாய் விளையாடுகவே-சிவனார் இடத்தில் (அடியேன் உனைப்போல் சேர்ந்து) விளையாடவே;

இயல் வேலுடன் மா அருள்வாயே-இயற்கையின் சொரூபமான(ஞான) வேலுடன், (ஓங்கார)மயிலையும் உதவுவீராக (எ-று).

## விளக்கம்

மேலேழ் கீழேழ் என உலகம் பதினான்கு உளதென்பர். அவைகளுள் ஒன்று, தவத்தினர் தங்கும் தவலோகம். தகுதியுடைய அவர்கள் தவத்தால், மற்றைய பதின்மூன் றுலகும் பயனடையும்.

அறியாமை மிகுந்து, அகங்காரம் கொண்டு, பொய் ஒழுக்கம் பூண்ட பொல்லாதவர்கள் அவுணர்கள். தலைவிரி கோலமான அவர்கள் ஆட்சி, தவலோகத்தால் தடைப்படுகின்றது. சிறந்த அவ்வுலகைச் சிதைத்தால், ஓங்கிய உலக எதிர்ப்புகள் ஒடுங்கி விடும். இந்த எண்ணம் கொண்டனர். எதிர்ப்பை வெறி கொண்டு எழுப்பினர். அதனால், தடுமாறியது தவலோகம்.

முறையோ முறையோ இறையோனே என்று அழுது கதறினர் அருந்தவர்.

அதை யறிந்து, வெம்பிச் சுழன்றது வேல். எம்மான் முருகன், எடுத்து வேலை யேவினன்.

புறப்பட்ட புனித வேல், பொல்லார் தலைகளைப் பொடிபடுத்தியது. மேலும் விரைந்தது. அசுரர்கட்கு இடம் கொடுத்து வளர்ந்த கடலை வற்றச் செய்தது. மறக் கருணை அசுர கண்டனத்தில் மலர, தவத்தர் இடத்து அறக் கருணை தழைத்தது என்று, ஓதி மகிழ்ந்தது உலகெலாம்.

---

கும்பிட் டிறைஞ்சிபல கோள்சேட்டை கொண்டஎனை
வம்பிட் டிழுத்தே வழிகாட்ட லென்றேயோ

## அன்புநெறி

வாய்மை உளத்தர் வள்ளி யம்மையார். கவர்ச்சி செய்யும் பசுமை நிறம், அவர் இதய அருளைக் காட்டுகின்றது. முன்னைய பிறப்பிலும், பின்னைய நிலையிலும், முருகா முருகா என்று உருகி யிருந்த அவர் அன்பு, பொங்கிச் சங்கியிற் போந்தது.

'என் கடன் பணி செய்து கிடப்பது
தன் கடன் அடியேனையும் தாங்குதல்'

என்ற நியதிப்படி, அன்பிற்குக் கட்டுப்பட்ட அறுமுகன், தயாமுக வள்ளியாரைத் தழுவினன்.

"மிகைத்த புனத்தில் இருத்தி அணைத்து
வெளுத்த பொருப்பில் உறை நாதா"

எனும் திருக் கயிலைத் திருப்புகழும் இதை நினைவுறுத்துகின்றது.

## வம்புவாழ்வு

அவநாள் கழிக்க அறிவேன்; உன் அடி போற்றி நிற்க அறியேன்; தவம் விரும்பும் அன்பர்கள் தாள் சார்ந்து வாழலாம்; சிறக்க எதுவும் செய்திலன்.

அதன் பயனாக, ஆணவம் அடர்த்தது. கன்மம் கனத்தது. மயக்கியது மாயை. காமம் கனன்றது. குரோதம் கொதித்தது. லோபம் சல்லாபம் செய்தது. மோகம் முதிர்ந்தது. மதம் பதைத்தது. மாற்சல்யத்தில் வாற்சல்யம்.

இவைகளால், ஆன்ம வாக்கத்துள் கடைசி ஆள் ஆயினேன். கடையேன் ஆனதற்கு, என் அறியாமையே காரணம்.

உலகம் உன் சொரூபம். விஸ்வாந்தர்யாமி எனும் நீயே உலகிற்கு உயிர். எப்பொருளிலும் நீ இருக்கின்றாய். மாபெரும் அறியாமை, அதை அறியாதபடி மறைத்தது.

என் இனம், என் சொத்து, என் மனைவி, என் மக்கள் என்று, குமிழிகள் பல கொப்புளித்தன. நீர் மேல் குமிழி நிலை யிலை என்று நினையாமல், இவர்களொடு நெடிது வாழ்வேன் என்று நினைந்தேன். பொருள் தேடு படலத்தில், சூழ்ச்சி பல செய்து சுழித்தேன். இடையிடை குமிழிகள், ஒன்றன் பின் ஒன்றாய் வெடித்தன. என் மனம் துடித்தது.

அவலமான இந்த வாழ்க்கையில், அன்ன விசாரம் முதற்படி. பணம் பணம் என்னும் பாழும் கவலை ஒருபுறம். இடையிடை மாதர் போக மயக்கம்.

---

நானே வலிந்துன்னை நாடேன் இருள்மலத்தால்;
கோனே யிழுத்தெனை நீ கொண்டணைப்ப தென்றேயோ

அப்பப்பா! பிரகிருதி ஆசைகள் இப்படிப் பெருகின. ஆசை, பிறவியை அளித்தது. இதனில் பட்ட துன்பம் பல கோடி. மதி மயக்கம் அதிகம். அதனால், அம் மாபெருந் துன்பங்களை மறந்தேன்.

"தாயே தந்தை யென்றும், தாரமே கிளை மக்கள் என்றும்
நோயே பட்டொ ழிந்தேன்"

என்கிறார் மேலோர்.

ஆ, எவ்வளவு பெரிய உண்மை இது!

எளியேன் படும்பாடு கண்டு இரங்கினை. சொரூப நிலையில் இருந்து, என் பொருட்டுத் தடத்தத் திருவுருவம் தாங்கினை.

## தெய்வத் தொடர்பு

ஐம்பூத நடுவில் இருப்பது அக்கினி. அதற்கு உயிராய் உளது ஞானத் தீ. அந்த ஞானக் கனலான அண்ணாமலையில், என்னில் இருக்கும் களங்கத்தை எரித்து, இனிது காக்க எழுந்தருளி யிருக்கின்றாய்.

வானளாவிய அருணகிரி எல்லையில் வந்ததும், நியதியான செய்திகள் பல, நினைவில் எழுந்து நிழலிடுகின்றன.

உலக போகமே ஒரு தாகம். அது ஒழிய வேண்டும். வயிற்றுப் பசியால், வாடுவது தீரவேண்டும். அருளுடையோர் ஆசி அமைய வேண்டும். அதற்கு வழி எது என்பதை, அண்ணாமலையில் வந்த பின்னர் அறிந்தேன்.

சி-மெய்; வ-அறிவு; ம்-இன்பம்; இனி ஒரு செய்தியும் அதில் இருக்கிறது. சி-பேசாது; வ-பேசும்; ம்-ஒருமை தரும். மனம் படபடத்தால், இந்த அநுபவம் மறைகிறது; ஊன்றி நோக்கினால் உண்மை விளங்கும்.

ஆஹா! சிவஞான மலரணையில் சிறக்க இருக்கும் அச்சிவ சொரூபத்தை, ஒரு பெண் என்று எண்ணல் பெரிய கடை.

அப்படி உருவகித்த பெண்ணொடு, என்றும் அநுபோகம் இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!

"சிவஞான புண்டரிக மலர்மாது டன்கலவி
சிவபோக மன்பருக அறியாமல்
செகமீ துழன்றுமல வடிவாயி ருந்துபொது
நிகழ்மாதர் பின்செருமி அழிவேனோ"

என்ற திருப்புகழை இக்கு எண்ணலாம்.

---

ஏழையா வர்மம்? இரக்கமிலை யா? இன்னும்
நான்றையா வணமுனடி நண்ணுவிப்ப தென்றேயோ

குற மாதுடன் மால் கடனும் எனவே அணைமார்பா! கர்மக் கடனுக, இதுவரை பவமாதின் உறவு எனக்குப் பலிக்க வைத்த நீ, அன்புக்கடனுக, எனக்குச் சிவமாதின் உறவு சேரச் செய்!

உணவிற்குத தக்கபடி உணர்வென்பர். அதை உணர்ந்திலன். உடல் பசியை உணாந்ததன்றி, ஆன்மப் பசியை இததனை நாள் அறியாது இருந்தேன். அதைத தவிர்க்கும் சிறந்த அமுதம், சிவ ஞானம். அந்த அமுதால் பசி அகலும்படி அருள்!

ஆன்மப் பசி அகன்ற பின், சிவமாதும் நானும் எனும் இருமை நிலையில் இருந்தால், மீட்டும் பிரிதல் வரும். அணு அணுவான பிரிவு, வளர்ந்து பெருகி, துன்பப் பிறவியில் தோய்த்துவிடும். அங்ஙனம் ஆகாதபடி, இருவர் ஒருவராகும் ஒருமை நிலையை உதவியருள்.

வெறும் வாய் வீச்சுடையது வையகம். இவ் வுலகில், இவன் ஒருவன்தான் அநுபவ ஞானி என்று ஆன்றோர் உரைக்கும்படி அருள்! முனைப்புடையது அல்ல இம் முறையீடு. பலர் சேர்ந்து சொல்லும் எதுவும் பலித்துவிடும்; அதனுல்தான், விநயமுடன் இப்படி வேண்டுகிறேன்.

படியளப்பவர் திருமால். படைப்பவர் பிரம தேவர். நீதி, நீர், கனல், காற்று, பொன் முதலியவற்றை, உலகினர்க்கு உதவுவது தேவர்களது உத்யோகம்.

இவர்கள் யாவரும், இவன் முருகன் என்று எண்ணும்படி, அரிய சாருப கதியை அருள்

வேதங்கள், அச் சாருப கதியை விளம்ப அருள்!

விமல சிவத்தின் இடத்தில், உன்போல் யானும் இருந்து விளையாட, வித்தக ஞானமான உன் வேலைக் கொடு! ஓங்கார மயிலையும் உதவியருள என்பது, இத் திருப்புகழில் உள்ள திருக் குறிப்பு.

வழிவகை

ஆணும் பெண்ணும் அனைத்தும், அருளமலன் சொருபங்கள் என்ற அபேத பாவனை, ஆரம்பத்தில் அமைய வேண்டும். சால்பு தரும் இச் சாதனையில், அடிமடியில் கையிடும் சோதனைகள் பல சுழன்று வரும். சலிப்படையாமல் இருக்க, சண்முக நாமம் துணை செய்யும்.

இடையருது ஆறெழுத்தை உருவேற்றி யிருந்தால், உணர்வு, மூலாதார ஒளியை உணரும்; அந்நிலையில், நாசியின் வலது துளை, இடது துளை எனும் மதி பரிதி ஆட்டம் மடக்கும்; அதன் ஓட்டம், வரவர ஒடுக்கும்.

---

**பாவலர்கள் போற்றுமுன்றன் பாத நிழல்காண**
**ஆவலித்தேன்; எண்ணநிறை வாவதும் என்றேயோ**

சாரமானது சைவநெறி எனும் சால்பு, வித்தக அங்கிலேயர்க் குத்தான் விளங்கும். சிவோஹம் பாவனை இத்தகையர்க்கே சித்திக்கும். அப்பொழுது சிறக்கத் தரிசனமாகும் சிவ சுடர். அதை ஆன்மா அறிந்து அகமகிழும். அந்த அளவில், மோசம் நாசம் மூள வைத்த மும்மல ஆட்சி முடிவடையும்.

அருட் சுடரின் அருமையை எண்ணி, அன்பால் அகமுருகும் ஆன்மா. அது கண்டு, அருளால் உருகும் பரம் பொருள். உருகிய நிலையில், ஆன்மா என்றும், சிவம் என்றும் உள்ள இருமை தீர்ந்து ஒருமை பிறக்கும்.

மறைகள் அனைத்தும் மதிக்க, வானோர் வாழ்த்த, சாருப கதி சாரும். பரசுப்ரமணிய மூர்த்தியின் திருவுருவைப் பெற்ற அபர சுப்ரமண்ய மூர்த்திகள், இப்படி எண்ணிறந்தோர் இருக் கின்றனர்.

"ஒரெழு கோடி ஐங்கரர்; கோடி வயிரவர்; ஒன்பது கோடி
சீர்கெழும் எண்தோள் நீலிகள்; மயில்மேல் செல்லும்
வேல் உழவர்எண் கோடி:
ஏர்பெறும் இயக்கர் ஒன்றரைக் கோடி; இசைநவில்
கின்னரர் கோடி;
கூர்நுதிப் பிறைப்பல் புயங்கம்ஓர் மூன்று கோடி;
தானவரிரு கோடி"

என்னும் காசி காண்டம் இங்கு எண்ணத் தகும்.

"மதியார் கச்சி—நதிஏகம்பம்
விதியால் ஏத்தப் பதியாவாரே"

என்று திருஞானசம்பந்தர் அருளியபடி, சாரூபம் பெற்ற பின் பதித் தன்மையாம் சாயுஜ்யப் பேறு சாரும். அது, 'இரும்புண்ட நீர்போல் திரும்பாத வீடு.' அதுவே முழுப்போகம்; சாருப சார்பு, அநுபோகம்; அது—தனை.

"இருநோய் மலத்தைசிவ ஒளியால்மி ரட்டி,எனை
இனிதா அழைத்(து,)எனது முடிமேலே
இணைதாள் அளித்(து,)உனது மயில்மேல் இருத்தி, ஒளிர்
இயல்வேல் அளித்து,மகிழ் இருவோரும்
ஒருவா(கு) என அருளவாயே"

என்ற திருப்புகழ் இங்கு எண்ணத் தகும்.

வாழ்க திருப்புகழ் வளம்.

---

இருதலைக் கொள்ளி எறும்பானேன் நீயே
வருதலை எண்ணென்முன் வந்தருளல் என்றேயோ

கட்டுரை-5

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

## 5. நிச்சய புத்தியும் சம புத்தியும்

கீதையின் இரண்டாவது அத்தியாயம் ஸாங்கிய யோகம் எனப்படும். இந்த அத்தியாயத்தில் பகவான் ஸ்வரூப ஞானத்தைக் கொடுத்துப் பார்த்தனுக்கு நிச்சய மானதும் சமமானதுமான ஸ்திர புத்தியை ஏற்படுத்து கிறார். வாஸ்தவ ஸ்வரூபத்தைப் பற்றிய ஞானம் ஏற் பட்ட பிறகு வாஸ்தவமற்ற மாயை தானே மறைந்து விடு கிறது.

எங்கும் நிறைந்த இறைவன் என்றும் உள்ளான், எல்லாமாகவும் உள்ளான். ஜீவனாகிய தனி மனிதனும் அவ்வாறே என்றும் உள்ளவனே. அடிக்கடி உடல் மாற் றம் மட்டுமே ஏற்படுகிறது. இந்த ஜட மாற்றத்தையே மாயா அறிவு காரணமாக நாம் ஜனன மரணம் என்று அவ்வப்போது கருதுகிறோம். பிறப்பு இறப்பு என்பதில் வாஸ்தவத்தில் கிடையாது. உண்மையில் எந்தவொரு பொருளும் அழிவதில்லை. உரு மாற்றமே பெறுகிறது. இந்த உண்மையையே இன்றைய விஞ்ஞானிகளும் பரிணாம மாற்றம் அல்லது பரிணாம வளர்ச்சி என்று கூறுகிறார் கள்.

ஞானி மரணத்திற்கு என்றுமே அஞ்சுவதில்லை. முது மையை வெறுப்பதுமில்லை. ஏனென்றால் சரீரத்தின் இயல்பு அவனுக்கு நன்றாகத் தெரியும். பிறப்பினால் அவன் மயங் குவதுமில்லை. ஆன்மாவிற்கு மரணமோ ஜனனமோ கிடை யாது.

தோன்றிய எதுவும் அழிந்தே தீரும். ஆகவே சரீ ரம், செல்வம், உணர்ச்சிகள், அறிவு உள்பட எல்லாமே

---

ஆவி பதைக்கின்ற தத்தநினைக் காண்பதற்கே
பாவி எனினும்கண் பார்ப்பதுநீ என்றேயோ

நிலையற்றவை. நிலையற்றதான சரீரத்தைப் பற்றிய தெளிந்த ஞானம் காரணமாகவே ஞானிக்கு மரண பயம் ஏற்படுவதில்லை. என்றும் உள்ளதும் உண்மையானதுமான பரம் பொருளைப் பற்றிய ஞானம் ஏற்பட்ட அந்த க்ஷணமே, இல்லாப் பொருள்களின் பாதிப்பிலிருந்து மனிதன் விடுபட்டு விடுகிறான். இது பொய்—இது பொய் என்று மனிதன் ஒவ்வொன்றாகத் தள்ளிக் கொண்டேபோய் உண்மைப் பொருளை நெருங்குவது என்பது அசாத்தியம். எது உண்மை என்று தீவிரமாக ஆராய்ந்தால் போதும். நிச்சயமான பரம் பொருள்தான் உண்மை என்பது அவனருளால் தானே தெரிய வரும். சம புத்தி நிச்சயப் பொருளைக் காட்டும்.

நிச்சயமான புத்தி உண்மைப் பொருளை நெருங்க சரியான வழி காட்டும். நிச்சய புத்தியென்பது வெறும் நம்பிக்கையினின்று வேறுபட்டது. பொருளின் உண்மைத் தத்துவத்தை மட்டும் ஊடுருவிப் பார்க்கும் தன்மையைக் கொண்டது.

பொய் யென்று ஞானிகளால் கருதப்படுகின்ற இவ்வுலகமும் உண்மைப் பொருளால்தான் நிறைந்துள்ளது. உண்மைக் கலப்பு ஒரு சிறிதுமின்றி எந்த ஒரு பொருளும் கண நேரங்கூட தரித்திருக்க முடியாது! ஆனால் ஞானியால் பொய்மையில் சிறிது உண்மையைக் கண்டு திருப்தியடைய முடிவதில்லை! உண்மைப் பொருளை அதனுடைய யதார்த்த ஸ்வரூபத்தில் அப்படியே முழுமையாகத் தன்னையும் உள்ளடக்கிக் காண விரும்புகிறான்! அழிவற்றதும் மாறுபாடற்றதுமான முழு முதற் பொருளே தானாக விளங்குகிறான்.

உடல் தோன்றி வளர்ந்து அழியும் இயல்புடையது. ஆனால் ஆன்மாவிற்கோ இவ்வியல்கள் கிடையாது. அது என்றும் முடிவில்லாதது. அது பிறப்பதுமில்லை. இறப்

---

சேற்றின்ப இவ்வுலகில் சீரழிந்தேன் என்றன்னை
மாற்றியருள் பொய்கையினில் வாழ்விப்ப தென்றேயோ

பதுமில்லை. உடல் அழியும்போதும் ஆன்மா பாதிக்கப் படுவதில்லை.

இந்த நிச்சய புத்தி தான் பாரதப் போரை ஒரு கொலைக் கதையாகக் கருதாதவாறு செய்ய முடிகிறது.

சரீரம் என்றும் அழிந்தே தீரும் என்பது நிச்சய புத்தி. ஆன்மா எப்பொழுதும் அழிவதே யில்லை என்பது நிச்சய புத்தி. பரம்பொருள் மட்டுமே என்றும் உள்ளது என்பது நிச்சய புத்தி. ஏனைய எல்லாம் பொய் என்பது நிச்சய புத்தி.

மரணம் தவிர்க்க முடியாத ஒன்று. எனவே அதைக் குறித்து துக்கிப்பதில் பயனே இல்லை. இதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமே இல்லை பரம்பொருளைப் பற்றிய நிச்சய புத்தி துக்கத்தை நிவர்த்தி செய்து விடுகிறது. பாசத்தை அடியோடு வேரறுத்து விடுகிறது.

ஜனன மரண பயமின்றி மனிதன் சமபுத்தியோடு தன்னுடைய ஸ்வ தர்மத்தை ஆஸ்ரயித்து வரவேண்டும்.

அர்ஜுனன் கௌரவர்கள் மீதுள்ள பச்சாத்தாபத் தால் போரை வெறுத்தாலும், உலகத்தார், பயம் காரண மாகவே அவன் யுத்தத்தை நிறுத்தியதாக எளிதில் குற்றம் சாட்டி விடுவார்கள். இந்த மாதிரியான அபவாதம் ஒரு க்ஷத்திரியனுக்கு ஏற்படக் கூடாது. மேலும் இந்தமாதிரி யான சந்தர்ப்பத்தில் அவனுடைய ஸ்வதர்மம் போர் செய்து நீதியை நிலை நாட்டுவதே யாகுமென்று கருதித் தான், பகவான் கீதா போதனை மூலமாக சலனமற்ற நிச்சய புத்தியை ஏற்படுத்தினார்.

வெற்றி, தோல்வி இரண்டிலுமும் சம பலன் தான் வீரனுக்குக் கிடைக்கும். இரண்டு முனைகளிலும் ஒரே பலனைக் காணும்பொழுது மனிதனுக்கு சம புத்தி ஏற்பட்டிருக்கிறது என்று

---

போற்றுவதும் பூசை புரிவதுவும் என்தொழிலா
ஆற்றுவதும் தேற்றி அருள்வதும்நீ என்றேயோ

கருத வேண்டும். அர்ஜுனன் இறந்தால் வீர ஸ்வர்க்கம் அடைவான். ஜெயித்தால் பூமியை ஆள்வான். தர்மத்தை ஆட்சி புரிவான். எந்த வகையிலும நஷ்டம் கிடையாது.

எது நிகழ்ந்தாலும் ஞானிக்கு இன்பம் தான். இன்பம்—துன்பம் ஆகிய இரண்டு பாதைகளும் அவனுக்கு பார மார்த்திக வழிகள் தான். எதில் சென்றாலும் அவன் கலங்குவதில்லை.

ஸ்வர்க்கத்தையே மேலாகக் கருதுவதும் சம புத்தியாகாது! எப்பொருளிலும் மெய்ப் பொருளைக் காணுவது தான் சம புத்தியாகும். முயற்சி மெய் வருந்தக் கூலி தரும். அது தரும் கூலியையும் இலாப—நஷ்டம், வெற்றி—தோல்வி என்ற பேத உணர்ச்சியின்றி சம புத்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவன் புத்திசாலியாயிருப்பதில் விசேஷ மெதுவும் இல்லை. அவனுக்கு நிச்சய புத்தியும் சம புத்தியும் இருக் கிறதாவென்பது தான் முக்கியம். வேண்டாத புத்தியால் யாருக்குத்தான் என்ன பயன்?

பரம்பொருள் அறிவு தான் நிச்சய புத்தி. பயன் கருதாமை தான் சம புத்தி. இந்த இரண்டும் பெறறவனே பாக்கிய சாலி. அவனே ஞானி. அவன் அழிவை உணர்ந்தவன். ஆனால் அழிவற்றவன். பொருளை அறிந்தவன். ஆனால் பொருளற்றவன். மரணத்திற்கு அஞ்சாதவன். ஆனால், மரணமற்றவன். வேண்டுதல் வேண்டாமை யில்லாதவன். என்றும் துன்பமற்றவன்.

செய்வன யாவும் சிவத்திற்காகவே என்ற நிச்சய மான-சம புத்தியுடன் நாம் வாழ்வதற்கன்றோ கீதை பாஷத காட்டுகிறது?

(தொடரும்)

---

செப்புக் களிப்பகற்றிச் செம்பொன்னுச் செய்வதுபோல்
துப்புறவு செய்தென்முன் தோன்றல்நீ என்றேயோ

# திருவண்ணாமலையில் அருளுரிமை

(இளவழகனார்)

அப்பரடிகள் திருவையாற்றிற்குச் சென்றிருந்து உருக்கமாகச் சில தேவாரப் பதிகங்கள் அருளிச் செய்தார்.

> "தானலாது உலகமில்லை
> சகமலாது அடிமை யில்லை"

என்னும் எடுப்புடைய திருப்பதிகமும் அவற்றில் ஒன்று. இயற்கையில் 'இன்னதல்லாமல் இன்னதில்லை' என்றும், 'இன்ன தில்லாமல் இன்னது நிகழ்வதில்லை' என்றும் தெளிவு செய்யும் கருத்துக்கள் அப் பதிகத்தில் வருகின்றன.

'இறைவனில்லாமல் உலகமில்லை, அதாவது உலகம் தொழிற் படுவதில்லை; உலகத்தையல்லாமல் இறைவனுக்கு வேறு அடிமையில்லை' என்பது, எடுத்த முதலடியின் கருத்து. இதுதான் அவ்வடியின் பொருள் என்பதை, அப் பதிகத்தின் எட்டாவது பாட்டிலும்,

> "சகமலா தடிமை யில்லை
> தானலால் துணையு மில்லை."

என்று தெளிவுபடுத்திக் கூறுகின்றார்.

இப்படிப் பல கருத்துக்கள் அப் பதிகத்தில் வருகின்றன; ஐயன் ஐயாறனார்க்குக் கானத்திலல்லது ஆடல் நிகழ்வதில்லை! கல்லால் நீழல் தவிர வேறு இருக்கையில்லை; நஞ்சு தவிர வேறு அமுதமில்லை; தெளிவைத் தவிர வேறு அருளில்லை; தொண்டலால் துணையில்லை; கலந்தபின் பிரிவதில்லை; எரியையன்றி உருவமில்லை; அரியலால் தேவியில்லை; திருநீறு தவிர வேறுசாந்து இல்லை; என்பன அவற்றில் சில.

இன்னும் இரண்டொரு கருத்துக்கள் வருகின்றன; நினைக்க நினைக்க மிக்க ஈடுபாட்டை அவை உண்டாக்குகின்றன.

---

நொந்துமனம் வாடாமல் நூலறிவு கொண்டுன்னை
வந்தித்து ஞானம் வருவதுவும் என்றேயோ

*தொண்டர் கூடித் தொழுது அழுது*
*ஆடிப் பாடும் அன்பு அலால்*
*ஐயாறனுக்கு வேறு பொருள் இல்லை'*

*'உயிர்கள் அவனுக்கு மீளா ஆள் ஆவதல்லால்*
*வேறு கைம்மாறில்லை'*

*'மலர் தூவிப் பணிந்து ஏத்துந்*
*தொண்டர் அகமலால் கோயிலில்லை'*

என்பன அவை.

தொண்டர் கூடவேண்டும், தொழுது அழுது ஆடிப் பாடவேண்டும்; அப்படிச் செய்யும் அன்பு அல்லாமல் ஆண்டவனுக்கு வேறு சொத்து இல்லை; தொண்டர்கள் அன்பே ஆண்டவனுக்குச் சொத்து.

உயிர்கள் அறிந்தும் அறியாமலும் ஆண்டவன் செய்து வரும் உதவிக்கு, அவை மீளா ஆள் ஆவதல்லாமல் வேறு என்ன கைம்மாறு செய்துவிட முடியும்! தொண்டராதலே வாழ்க்கையில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி!

உலகத்தில் தொண்டர்கள் உள்ளமே இறைவனுக்குக் கோயில்; எப்படிப்பட்ட தொண்டர்கள் உள்ளம்? புறத்திலும் பொறிபுலன்களை அருள்நெறியில் திருப்பும் பொருட்டு, கையால் நாள்மலர் தொழுது தூவி, அதுவும் நகமெலாம் தேயத்தூவி, முகமெலாம் கண்ணீர் மல்க இறைவனது உருவக் கோலத்தின் முன் இருந்து, பணிந்து ஏத்துந் தொண்டர் அகமலால் கோயில் இல்லை அப்பெருமானுக்கு!

ஆண்டுதோறும் உரிமைத் திருநாளில் (ஆகஸ்டு 15-ல்) சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தின் சார்பில், ஒளியுருவாய் ஐயன் எழுந்தருளிய திரு அண்ணாமலைத் தலத்துக்கு, அடியார்கள், திருக்கூட்டமாய் எழுந்தருளும் வாய்ப்பு உள்ளது. மீளா ஆள் ஆகி, ஆடிப் பாடி அன்பு செய்து ஒவ்வொருவரும் தத்தம் உள்ளத்தை எல்லாம் வல்ல இறைவனுக்குக் கோயிலாக்கிக் கொள்ள

---

பண்ணால் புகழ்ந்துன்னைப் பாடிமகிழ் அன்பரடி
நண்ணி, அவரருளை நாடல்தான் என்றேயோ

நல்ல நேரம் இது! 'சேர வாரும் செகத்தீரே' என்று மன்றத்தார் வாயிலாகத் திருவருள் அழைக்கின்றது!

எரியலால் உருவமில்லை இறைவனுக்கு என்று அப் பாடிகள் தெரிவித்தலால், ஒளிபுருவாகிய திருவண்ணாமலை யல்லது வேறு உருவத் திருமேனி ஏது பெருமானுக்கு; பஞ்சபூதத் தலங்களில் திருவண்ணாமலை யல்லது அக்கினித் தலம் வேறு இல்லையே!

உருவத் திருமேனிக்குத் தானே கோயில் என்பது சிறப்பு! உருவத் திருமேனியின் முன் இருந்துதானே தொழுது அழுது ஆடிப்பாடி அன்பு செய்ய முடியும்! மீளா ஆளாகித் தொண்டராகித் தம் உள்ளத்தை இறைவனுக்குக் கோயிலாக்குதல் கூடும்!

திருவண்ணாமலை முனிவரர் கூடும் தலமானதும் இதனால்தானே! அருணகிரியார் அருணகிரி நாதரானதும் இதனால்தானே! தீப்பொறி வடிவாகத் தோன்றிய அறுமுக முருகன், அதாவது உருவத் திருமேனி கொண்ட முருகக் கடவுள், அருணை முனிவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்ள, ஒளிமேனித் திருவண்ணாமலையில் எழுந்தருளிய இயைபு எவ்வளவு சிறந்ததா யிருக்கின்றது! ஆறு படை வீடுகளுக்கும் ஆதாரமாகிய அக்கினித் தண்டாந் திருவண்ணாமலையில், அக் கம்பத்திளையனார் அருணை முனிவர்கரு அருள்வாழ்வு அளித்தருளியது எவ்வளவு மாட்சிமை மிக்கது!

உருவமும் உயிரு மாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றனெம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணா மலையுளாய் அண்டர் கோவே
மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடி லேனே.

உரிமைத் திருநாள், அனைவர்க்கும் இவ் வருட்பேர் உரிமையையும திருவண்ணாமலையில் அளித்துதவுக!

---

நான்முகனும் காணவுன் நல்லருளை எண்ணி, அக்
வான்முகமா ஞானத்தால், வாழ்வதுவும் என்றேயோ

# பொருள் சேர் புகழ்

(ஆ. கி. ரங்கராஜன்)

*இருள் சேர் இரு வினையும் சேரா; இறைவன்*
*பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு—திருக்குறள்.*

பொருள் சேர் புகழ் யாது? இறைவனுடைய பொருள் தான் யாது? இறைவனுக்குத் தனித்துப் பொருள் என்று யாதுமில்லை. ஏன்? அவனே எல்லாமாக விளங்குகிறான். அப்படி யிருக்க, இறைவன் பொருள் சேர்புகழ் என்றால் என்ன? அப் புகழைப் புரிபவர் யார்? இருவினைகளென்ப தென்ன?

உலக உயிர்கள் நல்வினை, தீவினை எனும் இரு வினைகளில் சிக்கி உழல்கின்றன. இவற்றில் நல்வினையாகிய புண்ணியத்தினால் உயர்ந்த பிறவியும், துன்பம் குறைந்த இன்பமும், தீவினையாகிய பாபத்தினால் தாழ்ந்த பிறவியும், அதிக துன்பமும் உயிர்கள் எய்துகின்றன . ஆகவே இந்த இரு வினைகளில் எதனாலும், உயிர்கள் அழியா இன்ப நிலை யாகிய முக்தியை அடைய இயலாது என்பதை ஔவைப் பிராட்டி உணர்த்துகின்றார்.

"...அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது;
மானிடராய்ப் பிறந்த காலையும்
கூன், குருடு, செவிடு, பேடு நீக்கிப் பிறத்தல் அரிது;
பேடும் நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயல் அரிது;
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே."

இதில் ஒரு நுட்பத்தைக் காண்போம். யாகங்களும், தான தர்மங்களும் தவமும் புரிவதால், வானவர் நாடு அதாவது ஸ்வர்க்கம் எய்தும் வாய்ப்புக் கிடைக்கும். ஆனால் ஸ்வர்க்கமானது, துன்பம் குறைந்த இன்ப நிலையே

---

துன்பவினைத் தொல்லைபலசூழ்ந்தென்னைத் தொந்தரிக்க
இன்பவினைப் பல்விளிப்புத் தீர்வதுவும் என்றேயோ

யன்றி துன்பம் அற்ற தூய்மையான் ஆனந்த நிலை அலல என்பதை ஔவை மூதாட்டியார் விளக்குகின்றூர். அப்படியாயின், அத்தகைய உன்னத நிலையை எய்துதல் தான் எங்ஙனம்? முதற் கேள்விக்கு விடையின்றி மற்றொரு சந்தேகமும் எழுகின்றதே? எவருமே முக்தியை எய்தவில்லையா? நல்வினை, தீவினை இவற்றைத் தவிர அதற்கு வேறு எந்த சாதனங்கள் உள? மானிடன் சதா பிறவிக் கடலில் அமிழ்ந்து தத்தளிக்க வேண்டியவன் தானு?

சற்று ஆராய்ந்தால் இவற்றிற்கெல்லாம் விடை காணலாம். ஆனுல் அதன்படி நடத்தல் வேண்டும்.

எழுவகைப் பிறப்புக்களுள் மானிடப் பிறப்பே மிக மிக உயர்ந்தது; கிடைத்தற்கரியது. உயிர்கட்கு சிருஷ்டியின் முதல் தோற்றத்தில் மானிடப் பிறவியையே இறைவன் அளிக்கின்ருன். ஆராய்ந்துணர ஆறுவது அறிவையும் அளிக்கின்ருன். சகலவற்றையும் அனுபவிக்கப் பரந்த உலகினையும் பல்வேறு பொருள்களையும் காக்ஷிகளையும் தருகின்ருன்.

மானிடனே அவற்றின் உதவி கொண்டு ஆசைகளின் வசப்பட்டு அஷ்ட சித்திகளைக் கற்கின்ருன்; அகிலத்தைத் தன் குடைக்கீழ் ஆள முயற்சிக்கின்ருன்; தனது சாகஸங்களால் பிற உயிர்களைப் பிரமிக்கச் செய்கின்ருன். அவற்றை அடிமைப் படுத்துகின்ருன். கொடும் அல்லல்களுக்குட் படுத்துகின்ருன். தன்னிலும் மேலான (இறைவன்) ஒருவன் உளன் என்பதை அலக்ஷியம் செய்கின்ருன். இதன் விளைவு என்ன? அகாலத்தில் அழிகின்ருன். தன் வினைகட்கேற்ப வெவ்வேறு பிறவிகளை எய்துகின்ருன். மானிடப் பிறவியினின்றும் தவறி விட்டால் மீண்டும் அப்பிறவியை அடைதல் அரிதினும் அரிது. இதைத்தான் ஔவையார் தெளிவு படுத்துகின்ருர்.

சரீரத்தில் உயிர் இருக்கும் வாழ்க்கையானது நீரின் மேல் தோன்றும் குமிழியைப் போன்றதாகும். அக்குமிழ் தோன்றுவது போல் தோன்றி திடீரென்று உடைவது போல் மறைந்து விடும். அதற்கெனவே தாயுமானுரும்,

---

மனக்கபட மின்றியுனை வாழ்த்துகின்றேன் ஓகோகோ
உனக்கபயம் எனுமெனை நீ உவந்தருளல் என்றேயோ

ஐந்து வகையாகின்ற பூத பேதத்தினால்
ஆகின்ற ஆக்கை நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்றதென்ன நான்
அறியாத காலமெல்லாம்
புந்தி மகிழுற உண்டு உடுத்தின்ப மாவதே
போந்த நெறி என்றிருந்தேன்!
பூராய மாகநின தருள்வந் துணர்த்த இவை
போன வழி தெரியவில்லை;
எந்தநிலை பேசினும் இணங்கவிலை யல்லால்
இறப்பொடு பிறப்பை உள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறா(து)
இருவிழியும் இரவுபகலாய்
செந்தழலின் மெழுகான தங்கமிவை என்கொலோ
சித்தாந்த முத்தி முதலே;
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே!
சின்மயானந்த குருவே!

என்று உலகத்துயிர்களுக்காக இறைவனை வேண்டி இரங்குகிறார் எனில், மானிடனுக்கு மீட்சியே இல்லையோ? இல்லாமலென்ன? எத்தனையோ வழி வகைகள் இருக்கின்றனவே!

இறைவனின் செயல்கள் என்ன? அவன் எத்தகையோன்? என்ன செய்தால் அழியா ஆனந்த நிலையை எய்தலாம்? இவற்றை ஆராய்ந்துணரத் தலைப்பட்டால் உடனே அதற்கு வழி வகைகள் தோன்றும். அவ்வகைகளை ஔவை முதலாகிய அறிஞர்களனைவருமே நன்கு விளக்கி உள்ளனர். அவற்றில் சிலவற்றை ஈண்டு கவனிப்போம்.

இறைவன் அன்பே வடிவமாகக் கொண்டவன். அன்பு செய்வாரிடம் சுடர்விட்டு ஒளிர்பவன். அவனைத் திருப்தி செய்விப்பதன் மூலம் அழியா இன்ப நிலையை எய்தலாம். எவ்வாறு? அவனால் படைக்கப்பட்ட ஏனைய உயிர்களிடம் அன்பு செலுத்துவதன் மூலம் அவனைத் திருப்தி செய்விக்கலாம். கைம்மாறு கருதாமல் செய்யும் நன்மைக்கே அன்பு செய்தல் என்னும் பொருளாம். கைம்மாறு கருதினால்

---

காட்டாயோ நல்லகதி; காணடியேற் கொள்ளமுதம்
ஊட்டாயோ ஐய! உறுவதிவை என்றேயோ

அதுவே இரு வினைகளில் ஒன்றாகிய புண்ணியம் என்பதில் இறைவனருள் மானிடனைக் கொண்டு சேர்க்கும். அதன் பலன் மானிடப் பிறப்பிலேயே சிறிது உன்னதம் பெற்ற பிறவி, அல்லது வானவர் வாழ் நாட்டில் சிறந்த இன்பங்களைத் துய்க்கும் உயரிய பிறவி கிடைக்கக் கூடும். ஆனால் அவைகள் நிலையற்றவையே.

இயல்பாகவே எதனிடத்தும் இரக்கம் கொள்ளும் தன்மையை எய்துதல் வேண்டும். அவ்வாறு எய்துவோர் முக்தி நிலையைச் சற்றும் எதிர்பாரார். அவர்கள் எவ்வருணத்தில் பிறந்தோராயினும் எத்தொழிலைச் செய்வோராயினும் இறைவனருளுக்குப் பாத்திரராவர்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்(கு) இல்லை;
இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். —திருக்குறள்.

அருள் என்னும் இரக்கமாகிய அமுதம் பெருகும் உள்ளமுடையவர்களுக்கு, இறைவனது கருணை என்னும் பிரகாசம் ஊடுருவிச் செல்லாத கொடுமை என்னும் இருளடர்ந்த துன்ப உலகில் புகும்படியான பயங்கர கதி என்றென்றும் இல்லை.

“நான் அநேக நற்காரியங்கள் செய்துள்ளேன்! என்னைவிடப் பெரியோர்களும் புகழ் வாய்ந்தவர்களும் இல்லை” என்று செருக்குடன் பேசிய யயாதி மன்னனை அமரர்கள் நிராகரித்துப் பூவுலகில் தள்ளி விட்டனர். ஆகவே,

யான் எனது என்னும் செருக்(கு)
அறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும் —திருக்குறள்.

அகந்தையையும் மமதையும் விட்டு அன்புப் பணி புரிவோர் ஸ்வர்க்கத்தினும் உயர்ந்ததாகிய அழியாத இன்ப நிலையை அடைவர்.

இனி நாம் முதற் கேள்வியாகிய பொருள்சேர் புகழ் யாது? என்பதற்கு விடை காண்போம். தாயுமானார் பின் வருமாறு கூறுகின்றார்;

---

ஆளிமுகன் ஆதி அவுணர்களை யார்த்தருள்செய்
மீனி,எனை ஏய்க்குமலம் வீழ்த்துவதும் என்றேயோ

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும் முதற்
பொருளாகிப், போதமாகித்,
தெருளாகிக், கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தேனாகி,
அருளானோர்க்(கு) அகம்புறம் என்றுன்னாத
பூரண ஆனந்தமாகி
இருள் தீர விளங்குபொருள் யா (து?) அந்தப்
பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்

முதன் முதலாகத் தோன்றிய பொருள் எது? உயிர்ப் பொருள்களும் உயிர் அற்ற இதர பொருள்களும். அதற்கு முன்...பூமி. அதற்குமுன்...சூரியன். அதற்குமுன் பிற அண்டங்கள். அதற்குமுன் ... அதற்குமுன் ... அதற்கு முன்...? இவ்வாறு ஆராயும் காலத்து இதற்கு ஒரு முடிவே காணப்பட மாட்டாது. இறுதியாகப் பார்க்குமிடத்து, நாம் காண்பது இவ்வளவு பொருள்களுக்கும் காரணமாய் நின்ற முதற் பொருளாகிய இறைவனேயே யாம். மற்ற யாவும் இறைவனது பொருள்களே யாம்.

பொருள்களை வைத்திருப்போருக்கு அவற்றைக் காப் பாற்றும் கடமை தவிர்க்க முடியாதது. ஏதேனும் ஒன்று பழுதுபட்டால் புதிதாக ஒன்றை உண்டாக்குதல் சாத்திய மல்ல. ஆனால் இறைவன் ஐந்தொழில் புரிபவன். ஆத லால் அவனுக்கு எத்தகைய ஆற்றலும் உண்டு. ஆயினும் முக்கியமாக இறைவன் தனது அன்பர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவனாகிறான். அந்த அன்பர்களே இனிறவ னின் முக்கிய பொருள் ஆவர். அன்பர்களால் குழப்பட்ட வனே ஆண்டவன் என்பதே, இறைவனின் பொருள் சேர் புகழ் ஆகும். அப்புகழ் புரிந்தவர்களே அனைத்திடமும் அன்பு செலுத்துவோர். அவர்களைப் புண்ணிய பாபங்கள் பற்றா.

இதனின்று நோக்குமிடத்து, அன்பின் வழிசென் றோர்க்கு ஸ்வர்க்க நரகங்களாகிய இருவினைப் பயன்கள் ஏதுமில என்றும், முக்தி நிலையே அவர்களடைவர் என் றும் நாம் உணர்கின்றோம்.

---

தாமதிப்பா யோ?என்றால் தாளமுடி யாதுதுயர் !
நீமதித்தே வந்துனது நிழலருளல் என்றேயோ

# துயிலிற் பயிலல்

தூக்கம் மக்களுக்கு இயற்கையாக அமைந்த தொரு பழக்கமாகும். போதிய தூக்கம் இல்லாத நாட்களில் உடம்பு அசதியடைவதை உணர்கிறோம். இரவில் விழித்திருக்க வேண்டி யிருப்பின் பகலில் தூங்க நேரிடும். உணவு எப்படி உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாததோ · அதே போல் உறக்கமும் அவசியமானதே. வளரும் குழந்தைகள் அதிக நேரம் தூங்குவதைக் காணலாம். வயோதிகர்களுக்கு அவ்வளவு தூக்கம் வேண்டுவதில்லை. ஏன்? வளர்ச்சி முடிந்து தளர்ச்சியடைந்து வரும் தருணம் வயோதிகப் பருவம் ஆகையால் தூக்கமும் அப்பருவத்தில் குறைகிறது. மற்றும் தேக உழைப்பு அதிகம் உள்ளவர்கள் நீண்ட நேரம் நன்றாகத் தூங்குகிறார்கள். நடை உழைப்பு கூட இல்லாமல் ஊர்தி கொண்டு செல்லும் செல்வந்தர்கள் தூக்கம் வரவில்லை யென்று வருத்தப்படுவதைக் காண்கிறோம். எப்படி ஒரு மின்சார பாட்டரி (Battery) யை மின்சாரம் செலவாகச் செலவாகப் புதுப்பிக்கவேண்டியிருக்கிறதோ, அதேபோல உழைப்பினால் நாமிழக்கும் சக்தியின் குறைவை உடலில் நிரப்புவதற்கு தூக்கம் அவசியம் வேண்டி யிருக்கிறது.

உடல் செயலற்றுக் கிடக்கும் தூக்க வேளையில் எவ்வாறு சக்தி ஊட்டப்படுகிறது என்று நோக்குமிடத்து, அது மனதின் செயலென்று விளக்கப் படுகின்றது. விழிப்பு நேரங்களில் மனம் இந்திரியங்களின் வயப்பட்டு விஷயங்களில் ஈடுபடுதலால் அமைதியற்று தானாக இயங்கும் ஆற்றலை இழக்கிறது. தூங்கும் வேளைகளில் பருஉடலின் பந்தமின்றி, மனம் பரவெளியின் ஈடுபாடுடையதாய் ஆகாசத்தில் இயற்கையாக அமைந்துள்ள சக்தி அணுக்களை ஆகர்ஷித்து உடலுக்கு உதவுகிறது. எப்படி ஆகாசத்தில் பரவிவரும் சப்த அலைகளை ரேடியோ ஆகர்ஷித்து நாம் கேட்கும்படி அச்சப்தத்தை வெளிப்படுத்துகிறதோ அதே போல் மனமும், சக்தியை ஆகர்ஷித்து உதவும் தன்மையில்

---

கொண்டாளா யாகினுமுன் ஞமக் குறிமறவேன்
தண்டா யுத! நீ தானருளல் என்றேயோ

தூக்கவேளையில் வேலை செய்கிறது. நாம் தூங்கும் முன், காலையில் இத்தனை மணிக்கு எழுவேண்டுமென்ற திட சங்கல்பத்துடன் தூங்குவோமாயின் ஒருவர் உதவியுமின்றியே குறித்த நேரத்தில் விழித்தெழலாம். இது பலருடைய அனுபவம். ஒரு மாணவன் தூங்கும் போது அவனுக்கு ஒரு பாடத்தைப் படித்து விளக்கம் கூறுவோமானால் அவனுடைய மனம் அதை உணர்கிறதென்றும், காலை எழுந்த உடன் அவன் அப்பாடத்தைப் படிப்பானானால் அதை முன்படித்த பழையபாடம் போல் எளிதில் உணர்கிறானென்ற முறையை, அமெரிக்காவில் பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள். மற்றும் சில பிள்ளைகளிடத்தில் நகத்தைக் கடிக்கும் பழக்கம் இருந்து வந்ததாம். அவர்கள் தூங்கும்போது ஒரு வைத்தியர் பக்கத்திலிருந்து 'என் நகம் புளிக்கிறது'' என்று நகத்தை வெறுக்கக் கூடிய சில வார்த்தைகளை அரைமணி நேரம் சொல்லி வந்தார். ஒரு வாரத்தில் ஒருபையன் அப்பழக்கத்தை விட்டுவிட்டான். அப்படியே சில தினங்களில் எல்லாப் பையன்களும் அப்பழக்கத்தை விட்டு விட்டனராம். எனவே மனம் சப்த அலைகள் மூலம் வரும் கருத்துகளை தூக்கத்தில் வாங்கிக் கொண்டு விழிப்புக் காலத்தில் அதைச் செயல் முறையில் காட்டுகிறது. தூக்கத்தில் இந்திரியங்கள் தூங்குகின்றனவே ஒழிய அந்தக் கரணங்கள் தொழில்பட்டுக் கொண்டிருக்கின்றனவென்று மேற்படி ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவருகிறது

அவ்வுண்மையை நாம்எப்படியும் பயன்படுத்திக்கொள்வது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். "செய்த வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இருநிதியம்'' என்ற முது மொழியைப் படித்திருக்கிறோம். இதன் உண்மை யென்னவெனில், நாம் செய்யும் வினைகள் நம் எண்ணங்களால் விளைவிக்கப் பட்டவைகள் என்றும், அவ்வெண்ணங்களுக் கேற்பவே சூழல்களும் அதனுலமைந்த அல்லல்களும் நேரிடுகின்றன என்பதாகும். நாம் எப்போதும் கொலை, திருடு, குடும்பக்கஷ்டங்கள் முதலிய விஷயங்களைச் சஞ்சிகைகள் மூலம் படிப்பது, கதை

---

**இட்டம்நின் மேலிருக்க; இம்மகியில் நானிருத்தல்,**
**கட்டம் கட்டம்;நின் கண்ணுறல்தான் என்றேயோ**

புத்தகங்கள் மூலம் கற்பனைக் கஷ்டங்களைப் படிப்பது, அப்படிப்பட்ட சினிமாப் படங்களைப் பார்ப்பது போன்ற பழக்கங்களை வைத்துக் கொண்டு நாம் சுகமடைய எண்ணு வோமானால், அது இயற்கை விதிக்கு முரணாகும். "நெருப் பில் கைவைத்தால் சுடும்" என்பது விதி. சுடுகையில்லா திருக்க வேணுமானால் நெருப்பினிடத்து போகக் கூடாது. நெருப்பை கையில் பிடித்துக்கொண்டு தெய்வத்தை நோதல் எவ்வளவு அறியாமையோ, அதுபோல் பிறருடைய இன் னல்களைப் படித்தும், கண்டும், கேட்டும் ஆனந்தப் பட்டால் அவை நம்மையும் வந்தடைகிறது. அந்த எண்ணங்களை மனம் உருவகப்படுத்தி நமக்குக் காட்டுகிறது. நாம் கஷ்டப்படும் போது தெய்வத்தை நொந்தால் என்னபயன்? அப்படிப்பட்ட எண்ணங்களுக்குப் பதிலாக தெய்வீக எண் ணங்களை யூட்டும் பாமாலைகளைப் பாராயணம் செய்வதோ, ஆலயங்களுக்குச் சென்று விழாவொலியைக் கேட்பதோ, ஆண்டவனை அலங்கரித்துக் கண்ணால் கண்டு ஆனந்திப் பதோ செய்துவந்தால், அப்பழக்கங்கள் மூலம், அருள், ஆனந்தம், அமைதியை ஊட்ட வல்ல நல்லெண்ணங்கள் மனதில் பதிய, நமக்கு நம்மனம் நல்ல சூழல்களையும் அன் பர்கள் கூட்டுறவையும் சேமித்துத்தரும்.

எனவே வாழ்க்கையில் ஒருவன் தன்னை எவ்வாறான எண்ணங்களுடன் ஈடுபடுத்திக் கொள்கிறானோ, எவ்வாறான பேச்சில் பழகுகிறானோ, அதற்கேற்ப அவன் மனம் அமைதி யுற்ற தூக்கநேரங்களில் வேலை செய்து, நல்ல வினைப் போகங்களை விளைவிக்கிறது. இந்த உண்மையைக் காட்டவே திருஞானசம்பந்தரும் பின்வருமாறு பாடியுள்ளார்கள்.

> "அவ்வினைக் கிவ்வினையா மென்று சொல்லும் மஃதறிவீர்
> உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
> கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுது நாமடியோம்
> செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறு திருநீலகண்டம்"

இந்த மன ஆற்றலை இன்னும் பலவிதங்களில் பயன் படுத்திக் கொள்ளலாம். நித்திரைக்குச் செல்லுமுன் மனதை ஒருமுகப்படுத்தி அமைதியுறச் செய்துகொண்டு,

---

இல்லாமல் வெம்மலநோய் ஏகஒரு நாள்வந்து,
சொல்லாமல் சொல்கின்ற சொல்லுரைத்த லென்றேயோ.

"உலகம் முழுவதும் க்ஷேமமடைய வேண்டும்; நம்மை வெறுப்பவர்களும், நாம் எவர்களை வெறுக்கிறோமோ அவர் களும் கூட நன்ருக வாழவேண்டும் என பிரார்த்தனையைச் செய்யவேண்டும். பின்னர் நமக்கு எதை அடைய விருப்ப மிருக்கிறதோ, உத்தியோகமோ, பணமோ, ஆரோக் கியமோ அதை மனதில் சங்கல்பித்துக் கொள்ளவேண்டும். அதை நிச்சயமாக அடைந்தே திருவோம் என்று உறுதி கூறிக் கொண்டு, அதன் அடைவில் ஒருவித சம்சயமுங் கொள்ளாது சங்கல்பித்துக் கொண்டு தூங்க வேண்டும். அப்போது மனம் அந்த சங்கல்பத்தை எடுத்துக் கொண்டு அதைப்பூர்த்தி செய்ய யுக்திகளையோ, ஆட்களையோ சிந் தித்து வைத்து விடும். விழித்தெழுந்தவுடன், நாம் அடைய வேண்டுவதற்கு எவ்வாறு முயற்சிக்க வேண்டுமென்று எண்ணிப்பார்த்தால், வழிகள் தாமாகவே சிந்தனைக்குவரும். அதன் வழி பின்பற்றி சங்கல்பத்தை பூர்த்திசெய்து அடைய விரும்பியதை அடையலாம். இந்த ஆற்றலையே தியான புருஷர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஞான அடைவில் விருப்பமுள்ளவர்கள், தியானம் செய்யப் போகும் போது தூக்கம் வந்து விடுகிறதே என்று கவலைப் பட வேண்டுவதில்லை. ஞான அடைவில் தீவிர இச்சை கொண்டு, தூக்க வேளைகளிலும் மனம் அதையே நாடும்படி மேற்கூறிய வண்ணம் பழகிவரின், ஞானிகளின் கூட்டுற வும் சங்கமும் அமையும். அவர்களின் அருளினுல் பரஞானம் பெற்று உய்யலாம். இதையே, சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்று, அவர் தூங்கும் வேளைகளிலும் அவருடைய மனம் பஞ்சாக்ஷர ஜபத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு துயிலிற் பயிற்சி முறையை அவரவர் களுக்கேற்ற நல்ல முறையில் வாழ பயன் படுத்திக் கொள்ளலாம்.

---

கலியே தன்னுட்சி காட்டிடினும், நீதான்
சலியேல் எனவொருசொல் சாற்றுவதும் என்றேயோ

# உண்மைப் பொருள் எது?

(கி. வா. ஜகந்நாதன்)

கந்தர் அநுபூதியாகிய சொற்கோயிலில் நம்மை அழைத்துக்கொண்டு செல்லும் அருணகிரியார் முதலில் பஞ்சக்கர யானையின் பதமலரைப் பணியச் செய்தார். அப்பால் திருக்கோயிலின் முன் நிற்கும் ஆடும் பரியையும், வேலையும், அணி சேவலையும் பாடச் சொன்னார். பிறகு சல்லாப விநோதனாகிய முருகனே தாம் பெற்ற அநுபவாதிசயத்தைத் தம் வாயிலாகச் சொல்லவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார். இதுவரையில் கந்தர் அநுபூதியின் வெளிப் பிரகாரத்தில் சுற்றினோம், இனி உள்ளே அடி எடுத்து வைக்கவேண்டும்.

அப்படி எடுத்துவைக்கும்போதே ஒரு கேள்வி காதில் ஒலிக்கிறது. கருத்தால் கேள்வி ஒன்றுதானானாலும் சொல்லால் பல கேள்விகளாகத் தோற்றும்படி இருக்கிறது பாட்டு.

> வானோ? புனல்பார் கனல்மா ருதமோ?
> ஞானோ தயமோ? நவில்நான் மறையோ?
> யானோ? மனமோ? எனைஆண் டஇடம்
> தானோ பொருளா வது?சண் முகனே!

"பொருளாவது எது?" என்று ஒரே கேள்வியில் கேட்பதை 'இதுவா, அதுவா?' என்று வெவ்வேறு கேள்விகளாக்கிக் கேட்கிறார். இதில் "வானோ, புனல்பார் கனல் மாருதமோ" என்று கேட்கும் கேள்விகள் இரண்டாக இருந்தாலும் அந்த ஓகாரத்தை மற்ற மூன்றினுக்கும் சார்த்தி, புனலோ, பாரோ, கனலோ என்று கேட்கவேண்டும். முதலிலும் கடையிலும் ஓகாரத்தை வைத்து மற்றவற்றிற்கும் கொள்ள வைப்பது ஒரு முறை.

வான் முதலிய ஐந்தும் பஞ்சபூதங்கள். அவை ஐந்தையும் சேர்த்து ஒரே கேள்வியாகக் கொள்வது ஒரு முறை.

---

நாள்பகையும் லக்னமொடு ராசிப் பகையுடனே
கோள்பகையும் தீர்த்தென்னைக் கொள்வது நீ என்றேயோ

அப்படிச் செய்தால் பஞ்சபூதமோ, ஞானோதயமோ, நான்மறையோ, யானோ என்று ஆறு கேள்விகளாக அமையும். இந்தக் கேள்வியைச் சண்முகனிடம் கேட்கிறார். ஆறுமுகம் படைத்த பெருமானை ஆறு கேள்விகள் கேட்பதும் ஒரு வகையில் பொருத்தந்தானே?

"பொருளாவது எது?" என்பது கேள்வி. பொருள் என்பதற்கு உண்மைப் பொருள் என்று உரை காண வேண்டும்.

"பொருள்அல் லவற்றைப் பொருள்என் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு." (குறள், 351)

என்பதில் பொருள் என்பது மெய்ப்பொருள் என்ற பொருளில் வந்துள்ளது. உண்மையல்லாத பொருள்களை உண்மையானவை என்று உணரும் மயக்க உணர்வாகிய அறியாமையால் உயிர்களுக்கு மேலும் மேலும் பிறவி உண்டாகிறது. பிறவித் துன்பத்தினின்றும் நீங்கவேண்டுமானால் எது உண்மைப் பொருளோ அதைத் தெரிந்து கொள்ளவேண்டும். உண்மைப் பொருள் இன்னதென்று தெரியும்போது பொய்ப் பொருள்கள் இன்னவை என்ற அறிவும் உண்டாகும்.

மயக்க வுணர்விலே கிடக்கும் மக்களுக்கு உண்மை இன்னதென்று உணரும் ஆற்றல் இல்லை. உணர்வுடையார் சொல்வதைக் கேட்கிறோம்; அது நினைப்பளவில் நிற்கிறது; அறிவிலே தட்டுப்படுவதில்லை; அப்படி அறிவிலே தட்டுப்பட்டாலும் உணர்ச்சியிலே ஒன்றுவதில்லை. அநுபவத்தினால் தெளியவைப்பது உணர்ச்சி.

கேள்வி எழுந்தால் விடை பிறக்குமாகையால் அருணகிரியார் இந்தக் கேள்வியை எழுப்புகிறார். ஆறுமுகம் படைத்த குருநாதனிடம் எழுப்புகிறார்.

இந்தக் கேள்வியை எழுப்புவதற்குக் காரணம் இருக்கிறது. இதில் கூறப்பெற்ற பொருள்களையே உண்மைப் பொருளாகக் காணும் மயக்க நிலையில் நாம் இருக்கிறோம். ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன்று உண்மையாக இருக்

---

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமெனும் நீவந்து
வலிந்தீர்த்தே என்னை வாழ்விப்ப தென்றேயோ

கிறது. உண்மை எப்போதும் ஒன்றுதான். அந்த ஒன்று நமக்குத் தெரியாதபோது இரண்டானாலும் பலவானாலும் மயக்கந்தான் உண்டாகும்.

உயிர், உலகு, இறைவன் என்பவற்றைப்பற்றி மக்கள் பல காலமாக ஆராய்ந்து வருகிறார்கள். கண் முன்னாலே தோற்றுகின்றவைகளை உண்மையென்று கருதி, இவற்றிற்குப் புறம்பே வாழ்க்கை இல்லை என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ஐந்து பூதங்களால்தான் உலகம் ஆகிறது. அவற்றைத் தவிர வேறு பொருள் இல்லை என்று சொல்லும் பௌதிகவாதிகளும் இருந்ததுண்டு. ஞானம் வந்தால் போதும் என்பவர்களும் இப்படி வேறு வேறு பொருள்களை உண்மைப் பொருள் என்று சொல்கிறவர்களுமாக உலகில் பல சமயவாதிகள் இருந்தார்கள்; இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள். அவர்களுடைய கட்சிகள் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. ஞான நூலாக இருந்தால் பரபட்சம் என்று ஒரு பகுதி வகுத்து, அதில் புறச் சமயத்தாருடைய கொள்கைகளை எடுத்துரைத்துத் தக்க காரணங்களால் ஆசிரியர்கள் மறுப்பார்கள். இது துதி நூல்; பிறருக்கு வழிகாட்டும் உணர்ச்சி நூல். ஆதலால் சில கட்சிகளையே அருணை முனிவர் எடுத்துச் சொல்கிறார். பௌதிகவாதிகள், ஞானவாதிகள், வேதவாதிகள், அகங்காரவாதிகள், பேதவாதிகள், ஆண்டவன் அருள்நெறிவாதிகள் என்று இங்கே அவர் கேட்கும் கேள்விகளுக்குரிய கட்சியினருக்குப் பெயரிடலாம். இவை சம்பிரதாயமாக நூல் வழக்கில் உள்ள பெயர்கள் அல்ல. இந்தப் பாட்டைக் கொண்டு இட்ட பெயர்கள்.

''ஆறுமுகப் பெருமானே! இந்த ஆறு வகையான பொருள்களில் எது உண்மைப் பொருள்?'' என்று கேள்வியைச் சமர்ப்பிக்கிறார் அருணை முனிவர். சில கேள்விகளில் நுட்பமாக விடைக்குரிய குறிப்பும் இருக்கும்: அவ்வண்ணம் இந்தக் கேள்விகளில் ஏதாவது விடைக்குரிய குறிப்பு இருக்கிறதா என்பதை ஆராயவேண்டும். சில

---

ஆராரோ வந்துவந்து அதிபந்தம் செய்கின்றார்
வாராயோ அன்னவரா வந்துபந்தம் செய்யாயோ

கேள்விகளைக் கேட்டால் அவற்றிற்கு எதிர்மறையாக விடை வரும். விடை கூறுவிட்டாலும் அந்தக் கேள்வியே அந்த விடையைக் குறிப்பிடும். "பொய் சொன்னவன் உருப்படுவானோ என்ற கேள்வி உருப்படமாட்டான் என்ற எதிர்மறை விடையை உள்ளடக்கி வைத்திருக்கிறது. அப்படி இந்த ஆறுபொருள்களுமே உண்மைப் பொருள் அல்ல என்று இப்பாடல் புலப்படுகிறதா? இதையும் ஆராயவேண்டும்.

(தொடரும்)

**ஸ்ரீ தேவிதாஸர்கள் 17**

# ஜல்லிகை

## (ரசபதி)

அரக்கர் குலததிற் பிறந்தான். சாவர்ணிகையை மணந்தான். ஜலம்போல் இளகிய மனத்தன். அவன் பெயர் ஜல்லன். தம்பதிகள், இல்லற நல்லறம் இனிது நடத்தினர். மண வாழ்க்கையில், ஒரு பெண் மகவு பிறந்தது.

மகவின் அழகு கண்டு, பெற்றோர் மகிழ்ந்தனர். தாய் மடி மேலும், தந்தை தோள் மேலும், குழந்தை தாவி வளர்ந்தது. ஜல ஜல் ஜல் ஜல் என்று, மகள் முன் குதித்து ஜல்லன் குதூகலித்தான்; அதுவே காரணமாக, தாயும் பிறரும், பிறந்த செல்வியை, ஜல்லிகை யென்று பேரிட்டு அழைத்தனர். இங்ஙனம் தந்தை பெயரைத் தனயை தாங்கினள்.

முதலாண்டு நிரம்பியது குடும்பம், குழந்தை பிறந்த நாளைக் கொண்டாடியது புனித மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. பகல் மணி பதினொன்று.

திமுதிமு என்று நிலம் அதிர ஒருவன் வந்தான். வீட்டுள் நுழைந்தான். அவனைக்கண்ட ஜல்லன், அவனுடன் வீட்டை விட்டு வெளியேறினன். அரை நாழிகை அளவில் திரும்பினன். மலர்ந்திருந்த அவன் முகம், பயங்கரமாக மாறியிருந்தது. கண்ட சாவர்ணிகை கலவரம் எய்தினள்.

ஏன்! என்ன செய்தி? எதற்கு இந்த வாட்டம்?

சாவர்ணிகா! அரக்கர்கள் இரக்கம் அற்றவர்கள். அவர்கட்கு அழிவுக் காலம் அணுகிவிட்டது.

---

என்னமுறை யிட்டும் இரங்காமை என்பவமோ
மன்னே குமரா! மதிதெளிய வாராயோ

என்ன சொல்கிறீர்கள்? ஒன்றுமே புரியவில்லையே!

என்னத்தைச் சொல்வது? இது, கரதூஷணர் ஆட்சிக் காலம். அவர்களுடைய ஆட்சி நிலத்தில் நாம் இருக்கிறோம். தசரத தநயன் தர்ம ரட்சகன்; பிதா வாக்ய பரிபாலனன். அந்த வாய்மை இராமனுக்கு, இது வனவாச காலம். அநியாயமாக அரக்கர்கள், எம்பெருமான் ரகுபதியை எதிர்க்கப் போகிறார்கள். போர்க்கு, ஊரில் உள்ள ஆடவர் எவரும் புறப்பட வேண்டுமாம். நானும் போய்த்தான் தீர வேண்டும். வேறு வழியில்லை. விடமாட்டார்கள் பாவிகள். வாய்மையை எதிர்த்து, இதுவரை எவரும் வாழ்ந்தது இல்லை. எனக்கு இறுதி யாத்திரை இது. எனக்குப் பின் இவ்வூரில் இராதே. ஊரைவிட்டு எங்கேனும் ஓடிவிடு! பத்திரமான இடத்தில் தங்கி, குழந்தையைப் பாதுகா! நாசகரமான அரக்கர் வாசனையை, நம் செல்வி அறிய வேண்டாம்!

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வீரர்கள புறப்படும் ஒலி செவியில் புகுந்தது. ஜல்லா! ஜல்லா!! வா!!! என்று வீதியில் பலர் கூவினர்.

விதியின்றி ஜல்லன் வெளியேறினன். சாவர்ணிகை மனம் படபடத்தது. வீதிக்கு வந்தாள். கண்ணிற்கு எட்டும்வரை, கணவன் சென்ற திசையே நோக்கினள். மருண்ட அவள் கண்கட்கு, உலகமே இருண்டது.

இரண்டு மணி நேரம்வரை, மனம் குழம்பி இருந்தாள்.

சென்றவர் அனைவரும், எதிர்த்த போரில் இறந்தனர். செய்தி வந்தது. அதை அறிந்தாள்.

வயிறு குழம்பியது. வாயலறைந்தாள். வயிற்றில் அடித்துக் கொண்டாள்; அரக்கர் வீடுகள் ஒவ்வொன்றிலும் அதே கதிதான். எனினும், அரக்கியர் பிறர், ஆறி மனம் அடங்கினர்.

சரவர்ணிகைக்கு இருப்புக் கொள்ளவில்லை. மலர் விழிகள, துயில மறுத்தன. அன்றிரவு ஒருவாறு அகன்றது. எழுந்தாள். ஜல்லிகையை எடுததாள். நாட்டம் சென்ற திசையில் நடந்தாள்.

வானளாவியது வராக மலை. அதில் தாம்பிர பரணி, உற்பத்தி யாகி ஓடுகிறது. கரை வழியே சென்றாள். எதிரில் ஒரு காடு. எவருடைய நடமாட்டமும் அங்கு இல்லை. ஆம். அது அமைதியான இடம்.

---

வந்துழலும் பஞ்சாய் மனஞ்சுழலல் கண்டுறுதி
தந்து,பவம் தீர்க்கநீ தானுறுதல் என்றேயோ

அங்குத் தங்கினாள். மூங்கில்களை முறித்தாள். பல தழைகளைப் பறித்தாள். அரிய ஒரு குடிசை அமைத்தாள். புதிய அதில் புகுந்தாள். ஒவ்வொரு நாளும், பழங்களையும் காய்களையும் பறித்தாள். தவிக்கும் பசியைத் தணித்தாள். குழந்தைக்குத் தன்பாலைக் கொடுததாள. பால் வடியும் அதன முகத்தைப் பார்த்தாள்.

பிறந்த ஒரு வருடத்தில் தந்தையைப் பிரிந்தாய்! அகதிகள் நாம். ஏனென்று கேட்பார் இல்லை; நம்மை ஏறெடுத்துப் பார்ப்பார், இவ்வுலகில எவரும் இல்லையடி ஜல்லிகா! என்று கண்ணீர் சிந்திக் கதறினள். நாள்கள மாதங்களாயின. இடையில், வளர்பிறைபோல் ஜல்லிகை வளர்ந்தாள். தாய், வரவர மகளின் மழலை கேட்டு மகிழ்ந்தாள். மாபெரும் கவலையைச் சிறிது சிறிதாக மறந்தாள்.

வளர்ச்சிக்குத் தக்கபடி, ஜல்லிகையிடம் அங்கத்திற்கு அங்கம் போட்டியிட்டு அழகு பொலிந்தது. கண்ட தாயின் மனம் களித்தது. பாவை ஜல்லிகைக்கு, இப்போது வயது பன்னிரண்டு.

பழங்களை காய்களை, இனிநான் பறித்து வருகிறேன அம்மா! இனி நீ சும்மாயிரு என்று விநயமுடன் தாயிடம் ஒருநாள் மகள் விண்ணப்பித்தாள்.

வேண்டாம் ஜல்லிகா! நான் போய் வருகிறேன் என்று—, தடை செய்து விட்டாள் தாய். ஒவ்வொரு நாளும், மகள் வேண்டுவதும், தாய் மறுப்பதும் வழக்கமாகி விட்டது. தாய் தடுப்பது ஏன்? விளங்கவில்லை. ஜல்லிகைக்கு, அது வியப்பா யிருந்தது.

நான் பறித்து வந்தால் என்ன அம்மா தப்பு! சொல்லம்மா! அம்மா! அம்மா! விஷயம் எனக்கு விளங்க வேண்டாமா? கொஞ்சிக் கெஞ்சினள் குமரி.

ஜல்லிகா! இன்றைய உலகம், கட்டுக் கெட்டுத் தடுமாறி யிருக்கிறது. பிழை செய்யும் ராட்சச குலததில் பிறந்தவர்கள் நாம். பாம்பின் கால் பாம்பறியும். அரக்கர் அக்ரமத்தை நான் அறிவேன். அழகின் கொழுந்தான உன்னை, அவர்கள் கண்டால் அராஜகம் செய்வர். எவ்வகை மனததில் இது ஒன்று என்பர். அதற்கு அஞ்சித்தான், காட்டில் எவரும் காணாதபடி, உன்னைக் கண் காணித்து வருகிறேன். அது என் கடன்.

உத்தமர் உன் தந்தை. இறந்த அவர் வாக்கை, இதுவரை நிறைவேற்றி விட்டேன். இனிமேல், உன்னை அந்தக் கிருபா சங்கரிதான் காப்பாற்ற வேண்டும் என்று, கலகல கண்ணீர் சிந்தினள்.

---

தாம்பாம் வலைசார் தனிமானைப் போல்பவத்தில்
சோம்பா அறிவு துலக்குவதும் என்றேயோ

இவ்விரிவுரையின் பிறகு, உலகை ஜல்லிகை உணர்ந்தாள். தான் ஒரு பெண்பால், தற்காப்பு வேண்டும், புறக்காப்பும் தேவை. ஆம், ஆம் என்று தலையை அசைத்தாள்.

கணவர் பிரிந்த கஷ்டத்தைச் சகித்து, இதுவரை காத்த தாயின் கருணையை நினைத்தாள்.

அம்மா! என்பொருட்டு நீ எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு, என்ன செய்தாலும் ஈடு செய்த தாகாதே! அதற்குமேல் பேசமுடிய வில்லை. சொறகள குழறின.

அழாதே ஜல்லிகா! அம்பிகை உனக்கு அருள் பாலிப்பள் என்று ஆறுதல் கூறினள அன்னை.

கிருபா சங்கரியான தேவி, உன்னைக் காப்பள்; அம்பிகை அருள் பாலிப்பள் என்று தகவொடு செய்த தாய் உபதேசம், பசுமரத்து ஆணிபோல் மகள் இதயத்தில் பதிந்தது. இடையில் ஆறு மாதங்கள், உருண்டு புரண்டு ஓடின. கால் தட்டுகிறது கர்மம். காப்பளிக்கிறது தெய்வம். இப்படிப் பயனுள உபதேசம் இடை யிடை பல செய்தாள் தாய்.

ஒருநாள், காய் கனி பறிக்கச் சென்ற சாவர்ணிகை, நெடு நேரமாகியும் திரும்பவில்லை. காலம் நீட்டிக்க நீட்டிக்க அஞ்சியது நெஞ்சம். சிறந்த தன் தாயைத் தேடி, ஜல்லிகை சென்றாள்.

அம்மா! அம்மா!! என்று கூவினள. எழுப்பிய அவள் குரல், காடு முழுதும் எதிரொலித்தது. எங்கும் தேடினள். அகப்பட வில்லை தன் அன்னை. மயங்கிய அவள் மனம்போல், அந்திப் பொழுதும் வந்து அணுகியது.

தாம்பிரபாணியில் வெள்ளம், கரைபுரண்டு செல்வதைக் கண்டாள. வெள்ளம் தாயை இழுத்துச் சென்றதோ? நினைக்கிற போதே நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது. அது தனியா யிருப்பவர்க்குப் பயங்காம் தரும் பழைய காடு; அதில் இருளும் பரவத் தொடங்கியது. அஞ்சிய நிலையில் திருமபினள். குடிசையுள் புகுந்தாள். கதவாகிய படலைச் சாததினள. இரவெல்லாம் பயமா யிருந்தது. மொட்டு மொட்டென்று கண்விழித்தாள். பொழுது விடிந்தது. தாயைத் தேடித் தவித்தாள். பயனில்லை. இதே நிலையில, பத்து நாளாக, வேதனை பெருகி, தாங்க முடியாமல் தடுமாறினள'

ஒரு நாழிகை யளவுதான் பிரிவு. மற்றநேரம் எல்லாம், தன் னைக் கண் காணித்தவள் தாய். அப்படிப்பட்டவள், எப்படி

---

காட்சிதரல் வேண்டும் கருணை கர! அருளார்
ஆட்சிதரல் வேண்டும் அதையோர்ந்துவாராயே!

இத்தனைநாள் பிரிந்திருப்பாள்? மோசமாகத் தாயின் ஆயுள் முடிந்திருக்க வேண்டும்! இப்படி எல்லாம் எண்ணி, வெம்பி முகம் வீங்கியது.

★

இனி எப்படி இக்குடிசையில் இருப்பது? என்னுதும் எண்ணினன், நதிக்கரை யோரமாகவே நடந்தாள். நதிக் கரையில் ஒரு மலைக் குகை. அதனுள் நுழைந்தாள். உள்ளே புகுந்தாள். விசாலமாக இருந்தது உள் பகுதி.

இது காப்பான இடம் என்று எண்ணினள். அன்றுமுதல் அதில் வசித்தாள். வேதனை செய்யும் பசிக்கு ஆகாரம் தேடி வெளி வருவாள. மற்ற நேரமெல்லாம் குகைக்குள்தான்.

கிருபா சங்கரீ! தேவி! உனையன்றி வேறு துணை இல்லை. அம்பிகே! கா அம்பா! கா! கா என்று, உள்ளம் உருகி உருவேற்றலாயினள். குணத்தில் சிறந்த கோமளை, சியாமளை தியானத்திலும் சிறந்தாள. இத் தொடர்பால், அவள் வாக்கிலும் மனத்திலும், புனித ஆத்ம சக்தி பொலிந்தது. இப்படியே புனிதமாகச் சென்றது பொழுது.

★

விருபாட்சன் என்று ஒரு அரக்கன், ஒரு நாள் மலைச் சாரல் வழியே வந்தான். காய் கனிகளைப் பறித்துக் கொண்டிருந்த ஜல்லிகையைக் கண்டான்.

காலடி ஓசை கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பிய ஜல்லிகை, எதிரில் இருந்தானை அறிந்தாள். காளைபோல் கம்பீரமான தோற்றம். பருத்து உயர்ந்த தோள்கள். எடுப்பான மார்பு. ஏறுபோல் பீடுநடை. அவன் புறத்தோற்றம், ஜல்லிகை மனத்திற்குச் சபலமளித்தது. என்ன அதிசயம்! பிராரப்தம் என்பது இதுதானோ?

ஜல்லிகையின் அழகு, காந்த சக்திபோல் அவனைக் கவர்ந்தது. அடிமேல் அடிவைத்து அணுகினான். நாணி ஒதுங்கிய நங்கையை நோக்கினான். பேசும் துணிவு பிறந்தது. மாதர் திலகமே! நீ யார் என்று நான் அறியலாமா?

தாங்கள் யார்?

தாய் தந்தையற்றவன். நான் ஒரு அனாதை.

இவ்வார்த்தைகள், ஜல்லிகைக்கு அதிக இரக்கத்தை அளித்தன. என் விதி இது; இவர் கதியுமா இப்படி?

---

வெம்புமிருள் நீதீர்க்கா விட்டால் இனியடியேன்
நம்புவது யாரை நல்காய் நீ எந்தாயே

என் பெயர் ஜல்லிகை. நானும் ஆதரவு இல்லாதவள். வனத்தில் தனித்து வசிக்கிறேன்.

ஜல்லிகா! ஆதரவற்ற நானும் நீயும், இன்று ஒன்று சேர தெய்வம் உதவியது. கூடுமான அளவு, இதை அநுபவத்திலும் கொணரலாமா? என்று, அஞ்சி அஞ்சிக் கேட்டான். அணு அணுவாய் அணுகினன். அவள் கையை, மெல்லப் பற்றினன் விருபாடசன்.

உடல் கூசியது: உள்ளம் குழைந்தது. அவனைத தடுத்திலள். வாளா இருநதாள். வார்த்தைகள் வளரவில்லை. காந்தர்வ மணத் தால் இருவரும் கலந்தனர்.

குகையுள முன்னைய நிலையில் ஒருவர். பின்னைய நிலையில் இருவர்.

நாள்தோறும், விருபாட்சன் காலையில் புறப்படுவான். அவ் வளவுதான். அந்தி நேரததில்தான் குகைக்குத திரும்புவான். ஒவ் வொரு நாளும், ஜல்லிகை தரும் காய் கனிகளை, வேண்டா வெறுப்பாக உண்பான். பசியில்லை ஜல்லிகா. இது அவனுடைய பதில். எங்குப் போகிறீர்? ஏன் இவ்வளவு நேரம்? என்று, கேண் மையோடு ஜல்லிகை ஒரு நாளும் கேட்டதில்லை. அந்த லௌகி கத்தை, அவட்கு அறிவிப்பவரும் இல்லை.

வாழ்க்கை இருவகை. ஒன்று புற வாழ்க்கை. மற்றொன்று அக வாழ்க்கை. புறவாழ்க்கையில் அவட்கு, கணவன் பூசிக்கும் தெய்வம. இதயத்தில், தேவ தேவியின் திருவுருவம். நாவில் அமலை யின் நாம ஜெபம். வாழ்விக்கும் இதுவே அவள் அக வாழ்க்கை.

* * *

உணவைத் தருகிறோம். அவர் உண்பது இல்லையே என்ற ஏக்கம் மட்டும், சில சமயம் இருந்தது.

★

கன்யா குமரி இன்று தமிழ்நாட்டின் எல்லை. அக்கு சுசர்மா என்றொரு அந்தணர்: வைதிக நெறி வழுவாதவர். பழுத்த பழம். தனக்கு இறுதி நாள் நெருங்குவதை எண்ணினர். கண்ணீர் சிந்தி னர்.

அவர் புதல்வர் தர்ம விரதர், கனிவுமிக்க தந்தை கண் கலங்கு வதைக் கண்டார். படபடத்தது மனம்.

---

புகழ அறியான் புன்மையனென் றேதள்ளி
இகழல்செய் யாதெனை நீ ஏற்றருள்ல் என்றேயோ

அப்பா! என்ன செய்தி? ஏன் வருந்துகிறீர்கள்?

தர்ம விரதா! தெய்விகமானது கங்கை நதி. வாழ்நாளில் நியதி யாக ஒரு நாளேனும் அதில் நீராட வேண்டும் பிறந்த நாள்முதல், அரிய அப்புண்ணியத்தை நான் அடையவில்லை; கங்கா ஸ்நானம் செய்யாமல், இறக்கப் போகிறேரும் என்ற கவலை, வரவர என்னை வருத்துகிறது. பயன்தரும் அந்த நீர் சிறிது என்மேல் பட்டு-பட்டு- உளருக்கும் சிறிது பருகினால்-பருகினால்தான், என் ஆத்மா சாந்தி யடையும்; இனிமேல் அது எப்படி முடியும்? என்று, விக்கி விக்கி அழுது விம்மினார் கிழவர்.

அப்பா! எனக்குச் சகிக்க முடியவில்லை. இதுவரைக்கும் இந்த வேதனையை எதற்கு இதயத்தில் புதைத்தீர்கள்? ஒரு வார்த்தை என்னிடம் சொல்லி யிருந்தால், என்றோ தங்கள் எண்ணம் நிறை வேறி யிருக்கும். புனிதமான கைங்கர்யம் இது. இப்போதே நான் புறப்படுகிறேன். குடத்தில் நீரைக் கொண்டு வருகிறேன். அது வரை மனம் ஆறியிரும்! நமஸ்காரம்.

தர்ம விரதா! அவசரப் படாதே! அதற்கு எவ்வளவு தூரம் போகவேண்டும் தெரியுமா? என்று இடைமறித்தாள் தாய்.

தெரியும் அம்மா! தெரியும். நான் திரும்பும் வரை, கனிவோடு அப்பாவைக் கவனியுங்கள்! இது தங்கள் கடன். நமஸ்காரம்! வருகிறேன்.

எதிர் வந்தாள் மனைவி.

பார்வதி! மாமன் மாமியார், தெளிந்த கண்ணிற்குத் தெய்வங் கள். நமக்கு மணம் நிகழ்ந்து ஆறு மாதங்கள் ஆயின; இதுவரை உத்தமி நீ என்று உணர்ந்திருக்கிறேன். நான் இல்லாத சமயத்தில் என் கவலை அவர்கட்கு எழலாம். அவர்கள் விஷயத்தில் கவனம் வை! ஆன உபசாரம் அதனையும் செய்! விரைவில் திரும்பி விடு கிறேன் என்று சொல்லிக் கொண்டே, வீட்டைவிட்டு வெளி யேறினன்.

விரைந்து நடந்தான். இடை வழியில் எண்ணிறந்த காடுகள். உதிர்ந்து கிடந்த காய் கனிகளை உண்டான். அதுவும் அகப்படாத இடத்தில், நீரைப் பருகி வயிற்றை நிரப்பினான். பொரி பொரிக்கிற வெயிலைப் பொருட் படுத்திலன். கல்லும் முள்ளும் காலில் தைத்தது. அவைகளை யெல்லாம் சகித்து, பகலென்றும் இரவென் றும் பாராமல், நடந்தவன் நடந்தபடியே யிருக்கிறான்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அவர்கட்குச் செய் யும் தொண்டே சிறந்தது. இந்த உயர்ந்த மன உறுதியுடன், அரிய

---

நாட்டம்தா, நாட்டஞ்சேர் நாயகா! என் மனத்தின்
வாட்டம்தீர் மெய்ம்மை வழிகாட்டும் மேலோனே

கங்கா தீரத்தை அடைந்தான். கங்கையைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. நியதியுடன் அதில் நீராடினான். நீறணிந்து இறைவனை நினைந்தான். நல்ல வேளை, எதிரில் குயவர் குடிசை ஒன்று இருந்தது. அவர்களை அணுகினான்.

ஐயா! யான் இருப்பது தென்கோடி. கங்கை நீர் விரும்பினார் என் தந்தை. அவர் எண்ணத்தை நிறைவேற்ற, வடகோடிக்கு இன்று வந்திருக்கிறேன். குடங்கள் இரண்டு கொடுக்க முடியுமா? விரும்பும் காசு தருகிறேன் என்று வினயமொடு வேண்டினான்.

அப்படியா! உம்மைப் பெறுவதற்கு, தவம் பல செய்திருக்க வேண்டும் உம் தந்தை. காசு வேண்டாம். இந்த கைக்கர்யத்திற்கு உதவாததும் ஒரு ஜென்மமோ? இப்படிக் குதூகலித்துக் கூறிய குயவர், இரண்டு குடங்களைக் கொடுத்தார். தண்டு ஒன்றும், உரமான கயிறுகளையும் உதவினார்.

தர்ம விரதன், நீரைக் குடங்களில் நிரப்பினான். காவடி கட்டினான். தோளில் தாங்கினான். விரைந்து திரும்பினான்.

போய்ச் சேர்வதற்குள், தந்தை உயிர் போய்விடுமோ? தெய்வமே! இந்த நீரை என் தந்தையிடம் சேர்க்கும் வரை, கருணையுடன் அவரைக் காத்தருள் என்று விழிநீர் சிந்தி வேண்டினான். நெஞ்சு படபடக்க, விறுவிறு என்று வாவியும் தாவியும் வருகிறான்.

★

அந்திப் பொழுது ஆரம்பித்தது. நடை தளர்ந்து, வேசாரி விருபாட்சன் வந்தான். கணவன் சோர்வை ஜல்லிகை கண்டாள். என்ன இது? ஸ்வாமி! ஏன் இப்படிச் சோர்ந்து இருக்கிறீர்கள்? என்று பணிவொடு அவன் கைகளைப் பற்றினாள்.

ஜல்லிகா! இன்று முழுதும் தேடினேன். அரிய உணவு, சிறிது கூட அகப்படவில்லை; ஆயாசமாக இருக்கிறது.......அதே நேரத்தில், யாரோ போகும் காலடி ஓசை கேட்டுத் திரும்பினான்.

ஆ! ஹஹ்ஹஹா இதோ ஒருபிராமணன். என் பசி, இனி இவனால் பறந்து விடும்! விடு கையை! விடு! விடு என்று வெடுவெடுத்தான் விருபாட்சன்.

தன் கணவன் மாம்ச பட்சணி யென்பதை அப்போதுதான் ஜல்லிகை அறிந்தாள். வேதனையால், அவள் மனம் வெடித்து விடும்போல் இருந்தது.

---

கல்லா மனமோ கரையாதென் பார்மேலோர்
புல்லாவந் துள்ளுருக்கிப் பொன்மைதர லென்றேயோ

என்ன சொல்கிறீர்? இரக்கம் அற்ற இதயத்தர் இறைச்சி உண்பது உண்டு. ஆடு கோழிகளை அநியாயம் செய்பவர், மச்ச உணவையும் மறந்திலர். நர மாம்ச நாட்டம், பாதகத்தில் பாதகம். அதிலும் பிராம்மண மாம்ஸமா! ஐயையோ, அது மகா பாதகம்!

காய் கனி கிழங்குகள, ஏராளமாக இருக்கின்றன. உயர்ந்த சுவை உடையன. வாரும்! உண்டு பாரும் என்று பிரியமுடன் அவன் இரு கைகளையும் பிடித்து இழுத்தாள.

நீ ஒரு பயித்தியக்காரி. உணவு வகையில், புலி பூனையாகி, பூனை ஆனையான கதைபோல், உயர்ந்தன ஆயினும் அந்த உணவு, எனக்கு ஒத்துக் கொள்ளாது. விடு என்னை! விரைந்து திரும்பி விடுகிறேன்.

நலம் சிறந்த அந்தணர்க்குத் தீங்கு செய்தோர், நாசம் அடைவார்கள். இது நிச்சயம்! வீணான இந்த எண்ணத்தை இப்போதே விட்டுவிடும்!

வரட்டுத் தவளைபோல், வள வள என்று பேசாதே! உன் உபதேசம் கேட்டால், நான் உருப்பட்டால் போல்தான்! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதபடி செய்து விடாதே! விடு கையை! விடுகிறாயா இல்லையா? திமிறினன் அத்தியோன்.

அடடா! ஐயையோ! சொன்னால் கேளுமே! அம் மாம்ஸம் விஷத்திற்குச் சமம். புசித்தால் உம் உயிர் போய் விடும்! என் தலை மேல் ஆணை! என்றாள்...ஹூம் என்று விருபாட்சன் உறுமினன்.

அகத்தியரால் வில்வலன் வாதாவி அழிந்த கதை அறியீரா? வேண்டவே வேண்டாம். குகைக்குள் போவோம்! வாரும் என்று, பட படத்துப் பேசி இயன்ற அளவு அவனை யிழுத்தாள்.

கைப் பிடித்துக் கதறும் ஜல்லிகையை, ஊதாரி அவன் உலும்பி உதறினன். உத்தமி நிலத்தில் உருண்டாள். புரண்டு எழுந்தாள். விழுந்தவள் எழுவதற்குள், விருபாட்சன் வெகுதூரம் ஓடினன். நில்லும் நில்லும்! என்று ஜல்லிகை, அவனை நெடும் தூரம் தொடர்ந்தாள்.

மாதா பிதாக்களை மனததில் எண்ணி, காவடியைத் தாங்கிச் செல்லும் தர்மவிரதனை, அணுகினன் விருபாட்ச அரக்கன்.

பின் புறத்தில் வந்தான். ஹஹஹஹாஹா! சிரித்து இடி முழக்கம் செய்தான்.

திடுக்கிட்டுத் திரும்புதற்குள்! கதையால் அதிரும்படி மண்டை மேல் அடிததான். அம்மா என்ற அலறல், அவ்வளவுதான். தரும விரதர், கால் முடங்கி வீழ்ந்தார்.

---

வேளையே பொல்லாதோ வெல்ல முடியாததுவோ
தாளையே பற்றுமெனைத் தான்காப்ப தென்றேயோ

ஊட்டியைக் கடித்தான். கொட்டியது குருதி. உதிரத்தை அறிவிலி உறிஞ்சினன். ஐயோ! இது என்ன கோரம்!

பதிவிரதை ஜல்லிகை வாக்கும் அப்போதே பலித்தது. உண்டால் உன் உயிர் ஒழியும் என்றுளே! அதன்படியே விருபாட்சன், அப்பொழுதே மண் மேல் விழுநது மடிந்தான். இவ்வளவு நிகழ்ச்சிகளும், கொடியளவில் நிகழ்ந்தன.

ஓடி வந்த ஜல்லிகை, தான் வந்து தடுப்பதற்குள் நடந்தவை கணை நினைததாள். நெஞ்சு பதைத்தது. ஒன்றுமே தோன்றவில்லை. காடு முழுவதும் அதிரக் கதறினள்.

தேவ தேவி! பரமேஸ்வரீ! உன் குழந்தை யல்லவா நான்! கரையற்ற கடல்போல் பெருகிய கவலையில, நான் காலாழ்வதோ தாயே! கருணைகரீ! அம்பா! அம்பிகே என்று மோதி அடித்தழுது மூர்ச்சித்தாள்.

★

கண்ணுவ முனிவர், வாய்மை மாணவர் தொடர, அவ் வழியே வந்தார். வரும வழியில், இறந்துளர் இருவர். மூர்ச்சித்தாள் ஒருத்தி. ஜலலிகையைப் பரிவோடு அருளால் பார்ததார். அவர் பேரருளால தெளிவு பிறநதது. ஜல்லிகை எழுந்தாள.

கண்ணுதல்போல எதிரில் நிற்கிறா கண்ணுவர். அடியற்ற மரம்போல, விநயம் காட்டி அவா திருவடிகளில விழந்தாள்.

தீர்க்க சுமங்கலியாய் இரு! என்று, ஆசி கூறினர் அருந்தவர்.

திடுக்கிட்டு எழுந்த சல்லிகை. தேம்பித் தேம்பி அழுதாள்.

என்னம்மா இது? யார் நீ? இவர்கள் யார்? எப்படி பிறந்தார்கள்?

பொருமி யழுத பூவை, குழறிக் குழறி நடந்தவற்றைக் கூறினள். பதியின் தேகத்தைப் பாாத்தாள். பதறினள்.

ஸ்வாமி! அவருடைய குணங்களை, முதலில் அறிந்திலன்: தெரிந்திருந்தால், ஆரம்பத்திலேயே திருத்தி யிருக்கலாம். தாயும் இலலை; தந்தையிலலை; இனிய பதியாய் இருந்த இவரும், மணந்த முப்பது நாளில் முடிந்தார். காவடி தாங்கிய அந்தணரைக் காக்க முயன்றேன. அதுவும் கைகூடவிலலை. என் வாழ்வு இனி வைதவ்யம்.

அருமை வாக்கால், தாங்கள் ஆசி வேறு கூறுகிறீர்கள. அவசரப்பட்டு விட்டீாகள். ஒருவரை ஓர்ந்த பின் அல்லவா ஆசியை உரைக்க வேண்டும்! விநாடிக்கு விநாடி மாறுகின்றது மனம்.

---

தாங்க மயிலுண்டு சார்வதுவும் தூரமல
ஏங்கல் தவிர்த்திட நீ எண்ணிவரல் என்றேயோ

அதற்குத்தக்கவாறு வாக்கும் போக்கும் நாறுகின்றது. பாவ இருள் படர்கிறது. சுழன்று வருகிறது அதற்குத் தக்க சூழ்நிலை. சிந்தனையிற் சிறந்து சிவமான தங்கள் வாக்கு, விழலுக்கு இறைத்த நீர் போல் என்னால் விரைய மாகிறதே என்று, அலுங்கிக் குலுங்கி அழுதாள்.

என்ன இது? உணராமல் ஏதேதோ உளறுகிறேனே! ஸ்வாமி! என் மனம் குழம்பி யிருக்கிறது. எல்லைக் கடந்து பேசிவிட்டேன். மன்னியுங்கள ஸ்வாமி! என்னை மன்னித்து விடுங்கள்!

சங்கடமான இந்நிலையில், ஜல்லிகா! என் விஷயத்தில் இரங்குகிறாய்! கலங்க வைக்கும் கர்ம ஆட்சி ஒரு புறம். ஆநந்தம் விளையக் காக்கும் அருளாட்சி ஒரு புறம். உனக்கு ஆசி செய்ய ஊக்கிய திருவருள் நோக்கை என்னால் உணர முடியவில்லை. இரு பார்ப்போம் என்றார். மேல் நோக்கி நடந்தார். தர்ம விரதர் அண்மையில் சென்று அமர்ந்தார். புறமுகம் பொய்க்க, உளமுக தியானபரர் ஆயினர்.

என்ன அதிசயம்! விமலன் திருவருள, அவர் மூலம் வெளிப்பட்டது. அநியாய மரணம் அடைந்த அந்தண குமாரர் உறுப்புகள், அசைந்தன. கண் திறந்தார். பழமையினும தேகம் பலத்தது. பழைய செய்திகள் பகல் கனவாயின. கண்ணுவரைக் கண்டார். துள்ளி எழுந்தார். பயபக்தியொடு அவரைப் பணிந்தார். புறமுக மான கண்ணுவரும், உயிர் பெற்றெழுந்த உத்தமனைக் கண்டார். எம்பிராட்டி திருவருளை எண்ணினார். இதயம் கனிந்து ஏத்தினார்.

தர்ம விரதா! பேதை யறிவால், முன்பிறப்பில் பசுவையும் கன்றையும் பிரித்தாய். கா! கா என்று அன்று கதறியது தாய்ப் பசு. முன் செய்த தீவினை இன்று இப்படி வந்து முடிந்தது. இனி ஒரு குறையும் இல்லை. புனித உன் பணி புரிய, இனி நீ புறப்படலாம்.

உடைந்திருந்த குடங்களும், முனிவர் அருளால் உருவாயின. தண்ணீரும் அவைகளில் தளதளத்தது. மகிழ்ந்தது மனம். வருகிறேன் ஸ்வாமி என்று வணங்கி, காவடியைத் தாங்கி, உவமை மிகுந்து தர்ம விரதர் ஓடினார்.

தீராத தீவினை தீர்ந்தது என்று மகிழ்ந்தது ஜல்லிகை மனம்.

அடிகளே திக்கற்ற என் முன், தெய்வம் போல் வந்தீர். அதிர்ச்சி பாதி அகன்றது. வாக்குப் பலிக்க எனக்கும் வழி காட்ட மாட்டீரா என்று, அவர் பாதங்கள் இரண்டையும் பற்றினாள்.

ஜல்லிகா! முன் பிறப்பில் உன் கணவன், இரு மனைவியரை உடையவன்; மாற்றாளிடம் செல்லாதபடி, அவனுக்கு மருந்திட்டாய்.

---

**என்னால் இனிப்பொறுக்க ஏலாதே ஏறுமயில்**
**முன்னை முறுவலித்து முன்வருவ தென்றேயோ**

பாழும் அச்செயலால், அவன் உயிர் பறந்தது. இடிந்த சக்களத்தி யின் சாபம் இப்பிறப்பில் வந்துன்னை இடித்தது.

விளைவை உணராமல் நீ வினை செய்தாய்; அதற்கு விடிவு உண்டு. விருபாட்சன், அறிந்தே பாவச் சேற்றில் படிந்தவன்.

புனிதவதியான உன வாக்கே அவன் உயிரைப் போக்கி யது. நீ தேவி பக்தை. அவனை எழுப்ப வேண்டுமேல், அதற்கு அம்பிகைதான அருள பாலிக்க வேண்டும். அதுவரை, உன் பார் வையால் பழுது படாது இவன் பாவ உடல்.

திருத்துறைப் பூண்டிக்குப் போ! விமலையைப் பூசனை செய்! மாபெரும் பேறு மலரும். வருகிறேன் என்று சென்றார் மாதவர்.

அவர் சென்ற திசையைத தொழுது நின்ற ஜல்லிகை, கண வன் உடலைச் சுமந்தாள். காதம் பலவும் கடந்தாள்.

திருத்துறைப் பூண்டியில் மாபெரும் சோலைகள் மணம் கமழ் கின்றன. தாடியும் ஜடையுமான முனிவர்பலர், அங்குத் தவம செய்கின்றனர்.

அங்கு இருந்த நவதீர்த்தப் பொய்கைக் கரையில், விருபாட்சன் உடலை வைத்தாள. நீராடினள். தகுதியுடைய ஒருவர் தநத திருநீறும் தரிததாள். பூசிய நீறுபோல் உள்ளும் புனிதமான சல்லிகை, சாம்பவி சந்நிதியைச் சார்ந்தாள். நின்ற நிலையில், கை களை குவித்தாள். உள்ளம் ஊன்றி, தற்பரையை உணர்ந்தாள். கிருபா சங்கரி! தேவி! அம்பிகே என்று, மனனமான மந்திரத் தையே உள்ளம் உருக உருவேற்றினள்.

ஒருநாள். இருநாள். பத்துநாள். ஆம். பன்னிரண்டு நாளாக அதே நிலை. பசி பறந்தது. இரவு பகல் அறிந்திலள். தன்னை மறந் தாள். சிந்தனையில் சிவை. பேஷ்!

பசுமை ஒளி, கண்முன் படர்ந்தது. குழலும் யாழும் போல், ஜல்லிகா என்ற ஒலி, செவியில் புகுந்து சிலிர்த்தது.

கண் திறந்தாள் பக்தை. வேதம் காணா விமலையை, கண் பெற்ற பயனெனும்படி கண்டாள். உள்ளம் உவகையில் துள்ளி யது. வாழ்ந்தேன் தேவி! என்று வணங்கினள். நம்பிய அடியவர் எழுபத்திரண்டாயிரம் நாடிகளை, அருளமுதத்தால் நனைப்பவளே! சதா சிவத்தின் இடத்தில் சார்பவளே! என் தாயே! என் அம்மா! என் தேவி! உன்பாத நிழலில் என்னை உருளவிடு! தெருளச் செய்! தேவி! மகாதேவி என்று தேம்பினள். ஆனந்தக் கண்ணீரால்

---

நின் துணையால் நீணிலத்தில் நேரும் சிறப்பனைத்தும்
வன்மை பெருகியென்றும் வாழுமெனல் ஓர்ந்தேனே

திருவடிகளை அபிஷேகிக்கும் பக்தை ஜல்லிகையை, அருளொடு நோக்கினள் அம்பிகை.

ஜல்லிகா! இப்பொய்கை நீரை அளளித் தெளி! எழுந்திருப்பான் இவன். வளம் பெற இவனுடன் வாழ்ந்திரு என்றுரைத்து உருக்கரந்தாள் உமாதேவி.

இறைவி அருளியபடி செயல் செய்தாள், இறந்த கணவன் எழுந்தான். விவரம் உணர்ந்து திருந்தினன். அவனுடன் சால நாள பரையை வழிபட்ட ஜல்லிகை, சிவ சிவைகளும், அத்தலத்திற்கும தன் பெயர் வழங்கத தந்து, அருள நிழல் சார்ந்து ஆநந்தம் அடைந்தாள். அவட்குப் பேறு அளித்த மாங்கல்ய தீர்த்தத்தில், பாவையர் நீராடி இன்றும் பயனை எய்துகின்றனர்.

வாழ்க தேவிதாஸர்கள்

---

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)

## திருச்செந்தூர்:—

திருச்செந்தூர் இரண்டாவது படை வீடாகும். 'ஜெந்து' என்ற சொல் 'உயிர்' என்று பொருள்படும். செந்தூர் - உயிருக்கு உரிய ஊர். செந்தில் - செந்து + இல் - ஆன்மாவின் வீடு. ஆன்ம லயஸ்தானம். இத் திருநாமங்களே திருச்செந்தூர் உயிருக்கு உயிராகக் கருதத் தக்க தலம் என்று அறிவிக்கின்றன.

## பூலோக கயிலாயம்:—

உலக வழக்கில் சைவ சமயத்தினரா, யுள்ளோர் எவரேனும் இறந்துவிட்டால் அவர் அதற்கு உரியராயினும் அல்லராயினும் 'சிவலோக பதவியடைந்தனர்' என்று கூறக் கேட்கிறோம். சிவலோகம் என்பது கண்ணுதல் பெருமான் இருக்கையாகிய கயிலையேயாம். சிவலோகம் காணும் விருப்பம் கொண்ட வரகுண பாண்டியருக்குச் சோமசுந்தரர் திருவருளால் கயிலைக் காட்சியே வழங்கினார் என்பது திருவிளையாடல் புராணத்தால் அறிகிறோம். ஆகவே சிவலோகம் அல்லது கயிலையை உயிர்கள் இறுதியில் அடைகின்றன என்பது மரபு. அது போலவே குமரனடியவர்

கயிலையின் ஒருசார் இலங்கும் கந்தலோகம் சேர்வர் என்றும் கூறுவர். இங்கே திருச்செந்தூர், உயிர்கள் அடையத் தக்க திருக்கயிலை (சிவலோக)ச் சிறப்பினை இம்மையே கூட்டுவிக்கும் பெருஞ் சிறப்பு உடையது - அதாவது பூலோக கயிலாயம் எனத் தகுவது. இதனை நம் அருணகிரியார் "கயிலை மலை அனைய செந்திற் பதியோனே" என்று விளக்கியுள்ளனர்.

## கடற்கரைச் சிறப்பு :—

திருச்செந்திற் செவ்வேளின் திருக்கோயில் கடலருகே நிற்கும் சிறப்பு கருதற்குரியது. சுருண்டு உருண்டு வரும் திரைகள் கோவிலின் மதிலில் படிந்து மடிந்து ஒழிவதனைப் பார்த்திருக்கலாம் இதனாலன்றோ 'திருச்சீர் அலைவாய்' என்ற திருநாமமும் செந்தூருக்கு உளதாயது. பிறவியலைக் கடலில் புகுதாதே, பிரகிருதி மார்க்கமுற்று அலையாதே, அவற்றால் வரும் பெருந்துன்பத்துள் ஆழாதே காப்பான் செந்திற் கந்தன். ஆதலினால் அவனுக்கு "ஏழு பிறவிக் கடலை ஏறவிடும் "நற் கருணை ஓடக்காரன்" என்ற திருநாமமும் ஏற்பட்டது. அதனால்தான் கந்தன் உறைவிடம் அலைகள் உலவிடம் என்றாயிற்று. 'சிந்து தீரயே ஆஸ்தே' என்ற ஆதி சங்கரரின் அருளுரையும் நோக்குக.

கடலிலே நத்தை முதலிய பூச்சிகளும் புழுக்களும் போன்ற எண்ணில் உயிர்கள் உள்ளன என்றால் அக் கடல் நகரான செந்தூர், உயிர்களுக்கு உரியது என்று உணர்த்தவும் வேண்டுமோ!

"சேலொடு வாளை வரால்கள் கிளம்பித்
தாருகொள் பூகம் அளாவிய இன்பச்
சீரலைவாய் நகர்" (திருப்புகழ்)
"சேல் பட்டழிந்தது செந்தூர் வயல்" (கந்தர் அலங்காரம்)

## காவற்காரன் :—

விலை உயர்ந்த பொருள்களையும் அளவில்லாத செல்வமும் உள்ள இடத்தில் காவல் வைத்திருக்கக் காண்கிறோம். கள்வர் கைக் கொள்ளாமல் செய்வதே காவலின் கருத்து. உலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றையும் விட உயர்ந்ததும் அருமையானதுமாக வுள்ளது 'உயிர்' தான்.

பொன்னணி போன்றவற்றைக் காக்க உதவுவது இரும்பால் ஆகிய பெட்டிகள். அதுபோல் உயிரை வைத்துக் காக்க உதவுவது உடல். இரும்பு பொன்னைப் போல உயர்ந்தது அல்ல, அதுபோல் உடலும் உயிரைப்போல் உயர்ந்தது அல்ல. பொக்கிஷத்தை, பொன் அணிகளைப் பெட்டியில் இட்டுப் பூட்டினாலும் கள்வர் கைப்படாதபடி காவல் வைப்பது வழக்கம். அதுபோல உடலாகும் பெட்டியில் அமைந்த உயிர் என்ற பொருளைக் காக்க ஒரு காவல்காரன் தேவை. அந்த காவல்காரன்தான் செந்திற் கந்தவேள்.

"காவற்கார" என்றே செந்தூர் சந்தத் தமிழ் செப்பிற்று. காவல்காரன் உயிரைக் கள்ளக் காலர் கைப்படாதபடி காக்கிறான். சாதாரண காவல்காரன் கூட தொப்பி யணிந்து சட்டை அணிந்து உடைவாள் அணிந்து கச்சை அணிந்து ஒலிக்கும் கருவி (whistle) தாங்கி காலையும் மாலையும் காத்து நிற்பான். கந்தனும் முடி அணிந்து உடை அணிந்து உடைவாள் அணிந்து ஒலிக்கும் கருவியான சேவல் தாங்கி காலையும் மாலையும் காவல் செய்கிறான்.

இதனை

"ஓலையுந் தூதரும் கண்டுதிண் டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்குமே கந்தவேள் மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும் கையில் சிவந்த செச்சை
மாலையும் சேவற் பதாகையும் தோகையும் வாகையுமே.
(சேலை - உடை, சீரா - வாள்.)

என்று கந்தரலங்காரம் விளக்குகிறது. ஆகையால் முருகன் காவலன் என்ற பொருளில் 'முழுச் சேவகன்' Typical Watchman) எனப்பட்டான். சேவகன்-வீரன் என்று கூறலுமாம்.

மேலே கூறியவற்றை விளக்கவே நம் அநுபூதி அடிகளார் செந்தூர்வேலன் திருவருள் பலத்தால் உயிருண்ணும் காலனையும் எதிர்த்து இடியென முழங்க வெற்றி பேசுகிறார்.

"தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி யுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச்சுடர் வடிவாள்
கண்டாயடா அந்தகா! வந்துபார் சற்றுஎன் கைக்கு எட்டவே"

இவை போலவன இன்னும் பல உள. அவற்றின் விரிவு அடியேன் எழுதும் 'மகிமை மாநகர் செந்தில்' என்ற கட்டுரைக் கோவையில் விளக்கப்படும்.

"காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலினார் தந்துடன் கொடுபோகக்
காதலரா மைநதரும் தாயராரும் சுடும்
கானமே பினதொடர்நது அலறுமுன்
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமும்
சூடுதோ ளுந்தடம் திருமார்பும்
தூயதாள் தண்டையும் காணஆர் வஞ்செயும்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்

சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயம்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே

முத்தித் தலம்

திருச்செந்தில் உயிர்க்கு வீடளிக்கும் தன்மையது என்றோம். முத்தியுபாயம் கூறப் புகுந்த திருப்புகழ் முனிவர் செந்திலோன் திருக்கை வேலையும் வெற்றி மயிலையும் மாலையும் காலையும் ஓதியுருக வேண்டும். இல்லையேல் எப்படி முத்தி காண முடியும்? என்கிறார்.

"செந்திலோன் திருக்கை வேலென் கிலை கொற்ற மயூரமென் கிலை
வெட்சிதண்டைக் காலென் கிலைமனமே எங்ஙனே முத்தி காண்
[பதுவே?"

தொடரும்

---

# The Assembly of Good Men

The assembly of good men has uniformly been recommended for the reformation of lost men and the transformation of wickedness into ways of sparkling purity. Good men, in the context, means men who feel one with the world, who look upon all lives as their own, who consider the sorrows and afflictions of others as their own and who live in the thought of the One all-pervading

God-head. The famous author of Thiruppugazh prescribes the association with the assembly of good men—bhaktas—as the only easy means of verance from the fate that pursues sin.

தொண்டர் குழாம் சாரில் கதி அன்றி
வேறிலை காண்.

These great men have abjured the sense of "I" and "Mine." Their minds being centred in God, however large may be the number in the assemblage, there is but one man and one mind. This realisation penetrates every one in the assembly, so that irrespective of individual merit, every one in the assembly gets the benefit of the highest savant in it. *Sat Sangam* as it is called, is highly valued in all the spiritual literature of the world

The culture of the east, particularly of India, has been preserved by *Sat Sangh* only. If only one sees how the illiterate masses have been able to reflect a high standard of spiritual life and selfless service, it will be clear that *Sat Sangh* and *Bhajana Associations* and Purana sravanam have been responsible for keeping the undying spirit of the Upanishadic religion in tact. Lack of true understanding might have introduced some superstitions, but with a propaganda of the vital truths and bakti, even these defects will disappear. For, God helps those who love Him and He will inspire and instruct wherever aspiration and love reside.

—*Thiruppugal Mani*

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில் வைத்(து,)உலகம் எழும்
தருமானை இடத்தினில்வைத் தருள்வானைப்,
பவளநெடும் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்,
பெரும்ஆனை மகிழ எறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை
அடிபணித்து பிறவி திர்வாம்

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடீஸ்
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 ஆவணி—அமிர்தவசனி)

-260-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் ,, ,, | | | |
| கணபதி பக்தர்கள் ,, ,, | | | |
| முருகனடியார் ,, ,, | | | |

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18